Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/940)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 09 திங்கட்கிழமை (26.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 362



தேசிய மட்டத்தில் வென்றது பற்றிக்ஸ்

06



மிகச்சிறியது அறிமுகம்

11



நிமிடத்திற்கு இரண்டு

15



உள்நாட்டில் அந்நியத் தலையீடு வேண்டாம்

12

## அமெரிக்க நீதிமன்ற வழக்கை எதிர்கொள்வதற்குத் தயார்

### சவீந்திர சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)


அமெரிக்க நீதிமன்றத்தில் தனக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்கள் தொடர்பாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக நீதிமன்றத்தில் முன்னிலையாகி பதிலளிக்குமாறு மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவுக்கு நியுயோர்க்கின் தெற்கு மாவட்டத்தில் உள்ள மன்ஹாட்டன் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

அழைப்பாணை அனுப்பிய அமெரிக்க நீதிமன்றத்துக்கு மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா 21 நாட்களுக்குள் பதிலளிப்பார் என்று (15 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் தலையீட்டைத் தவிர்க்க தமிழரின் பிரச்சினையை தீர்க்கவேண்டும்

### இந்தியப் பிரதமர் ஜனாதிபதியிடம் எடுத்துரைப்பு



(நியுயோர்க்)

வெளிநாட்டுத் தலையீட்டைத் தடுப்பதற்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை இலங்கை அரசாங்கம் உரிய முறையில் தீர்க்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளாரென இந்திய பிரதமரின் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15 ஆம் பக்கம் பார்க்க)

# போர்க்குற்றம், மனித உரிமை மீறல் நம்பகரமான நடவடிக்கை அவசியம்



### ஜனாதிபதியிடம் ஐ.நா. செயலர் வலியுறுத்து

(நியுயோர்க்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கு சுயாதீனமானதும், நம்பகரமானதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 66 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போதே இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் (15 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதிக்கும் அழைப்பாணை

(நியுயோர்க்)

அமெரிக்காவில் தங்கியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நியுயோர்க் மாவட்ட நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கேணல் ரமேசின் மனைவி நியுயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 'தேவி எதிர் ராஜபக்ஷ' வழக்கிலேயே ஜனாதிபதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாக ஈஜஎன் செய்தி கூறுகிறது.

இந்த வழக்கை படைகளிடம் சரணடைந்த பின்னர் படுகொலை செய்யப்பட்ட கேணல் ரமேசின் மனைவி வத்சலாதேவியின் சார்பில் சட்டவாளர் வி. ருத்ரகுமாரன் கடந்த 22 ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார்.

கேணல் ரமேசின் படுகொலை மற்றும் போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர் என்ற அடிப்படையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2000 முன்னாள் புலிகளுக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டு வழக்குத் தாக்கல்

### நியுயோர்க்கில் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(நியுயோர்க்)

புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட போராளிகளில் கடும் போக்கானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள 2,000 முன்னாள் போராளிகளுக்கு எதிராக கொலைகள் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வழக்குத்தாக்கல் செய்யப்படவிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

போரின் முடிவின் போது சுமார் 11,500 போராளிகள் படையினரிடம் சரணடைந்தனர், அல்லது கைது செய்யப்பட்டனர். இவர்களில் சுமார் 3,000 பேர் இராணுவத்தினரால் நடத்தப்படும் புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும் பேராசிரியர் பீரிஸ், தொடர்ந்தும் முகாம்களில் உள்ளவர்களில் 2,000 க்கும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் உரிமைகளை வென்றெடுக்க தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

### அழைப்பு விடுக்கிறார் ஆனந்தசங்கரி




(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதென்ற பொது விடயத்திற்காக தமிழ் கட்சிகள் அனைத்தும் தம்மிடையே உள்ள பேதங்களை மறந்து ஒன்றிணைய வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரி அழைப்பு விடுத்துள்ளார்.

நல்லூர் வடக்கு வீதியிலுள்ள நடராஜ மண்டபத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டிற்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

எந்தவித பாகுபாடுகளும் இன்றி தமிழ் கட்சிகள் சேர்ந்து இயங்க தயாராக இருந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவர்களை இணைத்து செயற்படவேண்டும். நாங்கள் எதையும் தனித்து செய்ய (15 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் அசாதாரண சூழ்நிலை; யாழ். பொலிஸ் அதிகாரியுடன் பேச்சு



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலைகள் தொடர்பாகவும் சமூக மற்றும் கலாசார சீர்கேடுகளை கட்டுப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடலொன்று ஈ.பி.டி.பியின் உயர்மட்டப் பிரதிநிதிகளுக்கும் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேராவிற்கும் இடையில் நடைபெற்றுள்ளது. (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெயபுரம், வலைப்பாடு மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டால் அவதி

(கிளிநொச்சி)

பூநகரிப் பிரதேசத்திலுள்ள ஜெயபுரம், வலைப்பாடு கிராம மக்கள் குடிநீர் வசதி இன்றி அவற்றைப் பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்திலுள்ள மக்கள் குடிநீரைப் பணம் கொடுத்து வாங்க வேண்டியுள்ளதாகவும் வசதியில்லாதவர்கள் நீண்ட தூரம் சென்று வேறு இடங்களில் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தாம் எதிர்நோக்கும் குடிநீர் பிரச்சினை தொடர்பாக பூநகரி பிரதேச சபையிடம் பலமுறை தெரிவித்தும் அதற்குச் சபையினர் நீர் விநியோகத்திற்கான நீர் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதாகவும் இதனால் நீர் விநியோகம் செய்ய முடியாதுள்ளது எனப் பொறுப்பற்ற பதிலைக் கூறுவதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் குடிநீருக்காக கஷ்டப்படும் இம்மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரதேசசபை உரிய நடவடிக்கை எடுத்துச் செயற்பட வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (உ.77)

# அளவெட்டி வர்த்தக நிலையத்தில் பெறுமதியான பொருட்கள் திருட்டு

(அளவெட்டி)

அருணோதயக் கல்லூரி முன்பாக அமைந்துள்ள கஜமுகன் பல்பொருள் வாணிப நிலையத்தில் கடந்த 21 ஆம் திகதி இரவு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடையின் கூரை ஓடுகளை கழட்டி உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர். காலையில் கடையின் உரிமையாளர் வந்து பார்த்த போதே களவு போன விடயம் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக உரிமையாளர் நா.மகாலிங்கம் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஏழாவது தடவையாகவும் இரத்ததான முகாம்


(கோண்டாவில்)

கோண்டாவில் பொது அமைப்புக்களும், யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவும் இணைந்து இரத்ததான முகாம் ஒன்றினை நடத்தியுள்ளன.

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற இவ் உன்னத பணிக்கு 22 குருதிக் கொடையாளர்கள் தமது குருதியை வழங்கினர். கோண்டாவில் பொது அமைப்புக்கள் 2005ஆம் ஆண்டு முதல் வருடா வருடம் இரத்ததான முகாமை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



# வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடியேற்றம்



வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த பெருந் திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

17 தினங்கள் இடம்பெறும் திருவிழாவில் ஆறாம் திருவிழா வரை சுவாமி உள்வீதி உலா வருவார். ஏழாம் திருவிழா தொடக்கம் 17ஆம் திருவிழா வரை சுவாமி வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி வழங்குவார்.

9 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 10 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 11 ஆம் திகதி செவ்வாய்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், 12 ஆம் திகதி புதன்கிழமை கேணித் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

தினமும் பகல் திருவிழா காலை 8 மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 4.30 மணிக்கும் ஆரம்பமாகும். திருவிழாக் காலங்களில் பெரியாழ்வார் ஆச்சிரமமடம், லக்சுமி நாராயணாமடம், பரந்தாமன் மடம் ஆகியவற்றில் அன்னதானத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


திருவிழாவை முன்னிட்டு விசேட பஸ்சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சமயக் கோட்பாடுகளுக்கும் கலாசாரத்துக்கும் அமைவாக உடைகளை அணிந்து பெறுமதியான தங்க ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்து பெருந்திருவிழாவில் கலந்து கொண்டு வல்லிபுர ஆழ்வாரின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறங்காவலர் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

# அத்தியார் இந்துவில் இடம்பெற்ற நிறுவுனர் தினமும், பரிசளிப்பு விழாவும்

(நீர்வேலி)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசில் வழங்கும் விழாவும் கடந்த 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 3 மணி வரை இடம் பெற்றது.

புதிதாகப் புனரமைக்கப்பட்ட கல்லூரி மண்டபத்தில் அதிபர் இ.குணநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதமவிருந்தினராக யாழ். செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ச.குகதாசன் அவரது துணைவியார் கோமதி குகதாசன் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி வே.பாலசுப்பிரமணியம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், கௌரவ விருந்தினராக அமெரிக்கப் பொறியியலாளரும் பழைய மாணவருமாகிய த.சதீஸ் கலந்து கொண்டார்.



நிறுவுனர் நினைவுப் பேருரையை கல்லூரியின் பழைய மாணவரும் ஓய்வு நிலை அதிபருமாகிய க.சி.பகவத்சிங்கம் நிகழ்த்தினார்.

கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை, கொக்குவில் இந்து அதிபர் இ.அகிலதாஸ் மற்றும் அயற்பாடசாலைகளின் அதிபர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், பெற்றோர், பழைய மாணவர் என நூற்றுக் கணக்கானோர் நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

முன்னதாக நிறுவுநர் நினைவுத் தூபியில் மலர் வணக்கம் இடம்பெற்றது. நிறுவுனர் அமரர் அத்தியார் அருணாசலத்தின் குடும்பத்தினர் சார்பில் சிவகுமாரன் குடும்பத்தினர் மலர்வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து விருந்தினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மலர் வணக்கத்தில் ஈடுபட்டனர்.

அத்தியாரின் திருவுருவச் சிலைக்கு அதிபர் மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார். விருந்தினர்கள் கல்லூரி முன்றிலில் இருந்து பருத்தித்துறை வீதியூடாக பிரதான மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

கல்லூரியின் பழைய மாணவரும் மூத்த சிவாச்சாரியாருமாகிய நீர்வைமணி கு.தியாகராஜக்குருக்கள் ஆசியுரை நல்கியதைத் தொடர்ந்து அதிபர் இ.குணநாதன் அதிபர் அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரை இடம்பெற்றது. அதனை அடுத்து பழைய மாணவர் சங்கச் செயலர் சு.சண்முகவடிவேல், சிறப்பு விருந்தினர், பிரதம விருந்தினர் ஆகியோர் உரையாற்றினர்.

உரைகளைத் தொடர்ந்து பரிசில் வழங்கலும் அதனை அடுத்து கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

# யாழ்.சிறைச்சாலைக் கைதிகளுக்கு கைதிகள் தினத்தில் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கைதிகள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கமும், றோட்டறிக் கழகமும் இணைந்து போட்டிகளை நடத்தி பரிசில்களை வழங்கி வைத்துள்ளன.

நேற்று மாலை 3.30 மணிக்கு யாழ்.மத்திய சிறைச்சாலையில் சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன எக்கநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சிறைக் கைதிகள் தமது திறமைகளை வெளிக்கொணரும் விதமாக கட்டுரைகளையும், பாடல்களையும், கவிதைகளையும் புனைந்தனர்.

கவிதைப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சுகுணனும், இரண்டாம் இடத்தை மங்களதாசும் பெற்றுக் கொண்டனர்.

கட்டுரைப் போட்டியில் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை டயானியும், இரண்டாம் இடத்தை புஸ்பராணியும், மூன்றாம் இடத்தை வனஜாவும் பெற்றுக் கொண்டனர்.

கட்டுரைப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை றெனிவரும், இரண்டாம் இடத்தை சுகுணனும், மூன்றாம் இடத்தை நடராசாவும் பெற்றுக்கொண்டனர்.


தபால் மூலம் ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month SEPTEMBER 2011 - FEBRUARY 2012

20 வருட அனுபவம்

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு.டி
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

| | | | |
|---|---|---|---|
| ☐ கல்முனை | ☐ புத்தளம் | ☐ யாழ்ப்பாணம் | ☐ ஹட்டன் |
| ☐ மட்டக்களப்பு | ☐ வவுனியா | ☐ கண்டி | ☐ அனுராதபுரம் |
| ☐ திருகோணமலை | ☐ மன்னார் | ☐ கொழும்பு | ☐ நுவரெலியா |

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கை நெறி என்பனவற்றைக் கீழ் உள்ள கையடக்கத் தொலைபேசிக்கு sms செய்து பெற்றுக்கொள்ளலாம். mobile : 0777140844, 0718034848

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co - ordinator
MARUTHUR A.HASSEN (B.Sc psychology, M.Sc psychology,

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR SUPER MARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU - 07
web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 222 2917, 067 367 1749, 067 367 9688, 071 803 4848

(C/932)

விண்ணப்ப முடிவுத்திகதி: 28.09.2011

ஆற்றலைப்பெற வேண்டுமானால் மனதில் எப்போதும் ஆற்றலைப் பற்றிய எண்ணமே இருக்க வேண்டும். எண்ணத்தாலும், சொல்லாலும் செயலாலும், ஆற்றல்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும்.

- அரவிந்தர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நிலத்தையும் வாழ்வையும் காக்கும் உத்தி!

ஐ. நா. பொதுச்சபையிலும், ஜெனிவா மனித உரிமை பேரவையிலும் மகிந்த அரசாங்கம் பெரிய இடையூறுகள் எவையுமின்றி கடந்து வந்துவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த சில நாட்களாக, சர்வதேச மன்றம் இலங்கை அரசை மடக்கப்போகிறது, இதோ நமக்கான பழம் கனிந்து கையில் விழப்போகிறது... என்று நம் தமிழ்த் தீவிரவாதத் தலைமைகளும் ஊடகங்களும் இதையே நம் அரசியல் எதிர்பார்ப்பாக்கி விட்டிருந்தன. தமிழ் மக்களின் அரசியல் சூதாட்டம் இந்தக் குதிரையிலேயே கட்டிவிடப்பட்டிருக்கிறது என்று நம் கவனத்தையெல்லாம் அதிலேயே குவியவிட்டிருந்தன.

சரி, இதுவும் முடிந்தது. இனி அடுத்து எந்த மீட்பரையோ, மீட்பு வசனத்தையோ அல்லது மீட்புக் காணொளியையோ காட்டி அதுவே நம் அரசியல் உரிமைகளைப் பெற வழி என்று எதிலே கட்டி நம்மைத் தொங்கவிடப் போகிறார்களோ தெரியவில்லை. நமது தீர்வுக்கு நம்மிடம் எந்தவிதத் திட்டமும் வழிமுறைகளும் இல்லாமல் இப்படியே அவ்வப்போது ஒன்று மாற்றி ஒன்றாக எதையெதையோ காட்டி ஏமாற்றிக் கொண்டிருப்பது இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கப்போகிறது?

மக்களின் உடனடி வாழ்க்கை, அன்றாடத் தேவைகள், பசி, பிணி, குந்தக் குடிலற்று தொழிலற்று அலைதல், உறவுகள் இன்னும் ஒன்றாய்ச் [illegible] முடியாத வாழ முடியாத அவலம், கல்வி பொருளாதார சமூக வளப் பின்னடைவு என்று நமது இன்றைய பிரச்சினைகள் பலவாக உள்ளன. இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதில் நமக்கு இன்னும் எவ்வளவோ உதவியும் ஆதரவும் கைதூக்கிவிடலும் வேண்டியிருக்கிறது.

இந்நிலையில், பழிக்குப் பழி உணர்ச்சியையே பெருக்குவதிலும், எதிர்த்தரப்பே பெருங்குற்றவாளிகள் என்று நிரூபித்துத் 'திருத்தி' கொள்வதிலும், சேர்ந்து வாழ வகையோ நம்பிக்கையோ கிடையாது என்று கைவிரித்துக் காட்டுவதுமே ஒரே 'அரசியல்' என்று நடந்துகொள்பவர்களை நாம் யாருடைய பிரதிநிதிகளாய்க் காண்பது? அவர்கள் எந்தக் குடிமக்களுக்காக அரசியல் செய்துகொண்டிருக்கிறார்கள்?

குரலற்ற – சாதாரண மக்களைப் பாதுகாத்தல், அவர்களது துயர் களைந்து வாழ்வுக்கு உதவுதல் என்பதே அவர்களுக்குத் தலைமை தாங்க வருவோரின் பொறுப்பாகிறது. அதற்கான சாத்தியபூர்வ வழிகளைக்கண்டு கொள்ளுதலும், மீள்வதை விரைவுபடுத்தும் வகையிலான பேச்சும் செயல்களுமே நேர்மையைக் காண்பிக்கும். மாறாக, இன்றும் மக்களை நெருக்கடிகளுக்குள்ளும் உணர்ச்சிகர ஆவேசங்களிலும் வைத்திருப்பது மேட்டுக்குடி சுயலாப அரசியலின் ஏமாற்றுத் தொடர்ச்சியே ஆகும்.

மக்களை உணர்ச்சிகரப் படுத்தும் கருத்துக்கள் மூலம் போரும் வீரமும் முதன்மைப்படுத்தப்பட்டு அதிகாரப் பதவிகளை தக்கவைத்துக் கொள்ளப் பயன்படுத்தியது தமிழ் வரலாறு நெடுக இருந்து வருவது தான். சங்ககாலப் பாடல்கள் உயிரழிப்பு வீரத்தை விதந்தோதும் முறையில் இன்றும் நம்மை உணர்ச்சிவசப்படுத்துவதாகவே இருக்கின்றன.

'களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை ஈன்ற ஞான்றினும் பெரிதே' (புறம். 277) என்றும், போர்க்களத்தில் தப்பி மீளாமல் பிணக் குவியல் நடுவே சிதைந்து கிடந்த மகன் உடலைக் கண்டு பிறந்த போதைவிடப் பெரிதாக உவகை கொண்ட தாய் (புறம். 278) என்றும், போருக்கு அழைப்பு வரும்போதும் என் முறை வரட்டும் என்று காத்திருக்க முடியாமல் 'என்னை முன்னால் அனுப்பு' (புறம். 292) என்று அவசரப்படும் வீர ஆண் மகன்களை அரசர்களுக்காகப் புலவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

ஆனால் இவற்றை ஒரே குரலில் சொல்லிக் கொண்டிருப்பவையாக மட்டுமே அந்தப் பாடல்கள் இல்லை என்பதை கவனிக்கவேண்டும். மக்களைப் பாதுகாக்கவும் வாழ வைக்கவும் வீரமும் ஆவேசமும் மட்டுமே போதும் என்று சொல்லி அவை நின்றுவிடவில்லை. மாற்றுக் குரல்களும் இருந்திருக்கின்றன. தீதும் நன்றும் பிறர்தர வருவதில்லை என்பதை இடித்துச் சொல்லி, உனக்குத் துன்பம் தருகிறவர்களைப் பற்றி மட்டும் யோசித்துக் கொண்டிராமல் உன்னுடைய எந்தத் தன்மைகள் உனது துன்பத்திற்குக் காரணமாய் அமைகின்றன என்று யோசிக்கும்படி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

போரையும் பகையையும் பற்றி யோசித்துக் கொண்டிருந்த மன்னர்களிடம் போய் விவசாயிகளின் துயரையும் சாதாரண மக்களின் அவதியையும் துணிவோடு எடுத்துச் சொன்ன வெள்ளைக்குடி நாகனார் போன்றவர்கள் இருந்திருக்கிறார்கள். 'இவன் யார் என்குவையாயின்' எனத் தொடங்கும் முடமோசியார் பாடல் ஒரு நிலத் தலைவனிடம், போர் இன்றி இருத்தல் பற்றிக் கூறுகிறது (புறம். 13). வளம் நிறைந்த உன் நிலத்தைக் காக்க போர் செய்யாதே என்று அறிவுறுத்துவதன் மூலம் பெருநில அரசிடமிருந்து சிறு நிலத்தைக் காக்கும் உத்தி பேசப்படுகிறது.

இன்றும் நமது தேவை, நம்மிடம் ஏற்படவேண்டிய சிந்தை மாறுதலும் யதார்த்தத்தை உணர்ந்துகொண்ட திட்டமிடலும் வழிகாணலும்தான். நம் நிலத்தையும்வாழ்வையும்காக்கும்உத்தியை நம் புதிய சூழ்நிலைக்கேற்ப விவேகமுடன் கண்டடைந்துகொள்ள வேண்டியிருக்கிறது. - ஆசிரியர்

# "கொலைக்களம்" ஆவணப் படத்தை மக்களுக்கு காட்சிப்படுத்தியது தவறு

## - கள்னி பல்கலைக்கழகப் பேராசிரியர் -

(கொழும்பு)

இலங்கையின் கொலைக் களம் என்ற செய்திப்படத்தை தனியார் நிறுவனமொன்றே தயாரித்தது. ஆனால் அதை இலத்திரனியல் ஊடகங்கள் போட்டி போட்டுக்கொண்டு ஒளிப்பரப்பியதைக் கண்டோம். இது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. இது மக்கள் மனதை குழப்பிய விடயம் நாட்டு மக்களுக்கு இதைக காட்டியது நல்ல விடயம் அல்ல என்று களனி பல்கலைக்கழகப் பேராசிரியர் சுனந்த மகேந்திர. தெரிவித்தார்

இலங்கைப் பத்திரிகைப் பேரவையும், வடமேல் மாகாண ஊடகவியலாளர்கள் ஒன்றியமும் இணைந்து ஏற்பாடு செய்த பிரதேசச் செய்தியாளர்களுக்கான செயலமர்வு குருணாகல், வாயப்பொல விவசாயப் பயிற்சி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இலங்கைப் பத்திரிகைப் பேரவைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ. தயாரத்ன, ஞாயிறு லங்காதீப பிரதம ஆசிரியர் ஆயநந்த தொம்பகஹாவத்த, சிலுமின பிரதம ஆசிரியர் கருணாதாஸ சூயாராச்சி, மாகாண விவசாய அமைச்சர் ஹேரத், முன்னாள் பத்திரிகைப் பேரவைத தலைவர் எஸ். தம்முல்ல ஆகியோர் கலந்துகொண்ட இச் செயலமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கைத் தினசரிப் பத்திகைகளில் வெளிவரும் செய்திகளில் 60 வீதம் பிரதேச செய்தியாளர்களின் பங்களிப்பே காணப்படுகினறது. செய்தியாளர்கள் நாட்டிற்குத் தேவையான ஒன்றைத் தெரிவிக்க துடிப்புடன் செயலாற்றுபவரகள். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்கும் முன்னர் இலங்கையில் பத்திரிகைப் பேரவை அரசசார்பற்ற நிறுவனங்களின் பணத்தைப் பெற்றுக்கொண்டு அவற்றின் கைப்பொம்மையாக செயறபட்டு வந்தது. ஒழுக்கச் கோவையை பின்பற்றாமல் சில ஊடகவியலாளர்கள் பணத்திற்கு அடிமையாகிச் செயற்படுகின்றனர் என்றார்.

சிலுமின பிரதம ஆசியர்கருணதாஸ சூரியராச்சி அங்கு பேசும போது கூறியதாவது, செய்திகளை எழுதும்போது தெரிவுசெய்து எ[illegible] வேண்டும். அவசரப்பட்டு செ[illegible]களை எழுதினால் வீண் பிரச[illegible]ணைகள் பலவற்றிற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படலாம். ஆராய்ந்து பார்த்து செய்திகளை எழுதினால உண்மைத் தன்மையை வெளிக் கொண்டு வரலாம். சிலர் தாங்கள் விரைவில் பிரபல்யம் அடையலாம் என தவறான செய்திகளை எழுதுகின்றனர். ஊடகத்துறையில இது ஏற்புடையது அல்ல.

சொற்பிரயோகம் எண்ணங்களும் ஊடகவியலாளர்களுக்கு சிறப்பாக இருக்கவேண்டும். அபபோது பிரபல்யமாக முடியும் வாசகர்களுக்கு புரியாத செய்திகளை எழுதக்கூடாது மற்றவர்களை அகௌரவப்படுத்தக்கூடாது. தற்போது சட்டங்கள் பல உள்ளதையும் நினைவிற்கொள்ள வேண்டும் என்றார்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சீடாநிதி உதவியுடன் கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் டபிள்யு.டி.பி அமைப்பினர் நேற்று யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச மத்திய உறுப் பினர்களைச் சந்தித்து கலந்து ரையாடினர்.

குடும்ப வன்முறைகள் தொடர்பாகப் பிரச்சினைகளை மத்தியஸ்தர்கள் எவ்வாறு கையாள வேண்டும் என இவ் அமைப்பைச்சேர்ந்த சியாமளா சிவகுருநாதன் திட்ட இணைப்பாளர் உதேனி தெவரப் பெருமா, சிரேஷ்ட திட்ட உத்தியோகத்தர் ரேணுகாராணி சின்னத்துரை ஆகியோர் விளக்கமளித்தனர்.

## மூன்று சடலங்கள் மீட்பு

(வவுனியா)

வென்னப்புவ மஹவெல மற்றும் கிரிந்திவெல ஆகிய பகுதிகளில் இருந்து மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. வென்னப்புவ வாய்க்கால் பகுதி மாஓயாவில் மிதந்துகொண்டிருந்த 19 வயது இளைஞனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் கதிரான வடக்குப் பகுதியைச் சேர்ந்தவர் என்பது விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. சடலத்தில் வெளிக்காயங்கள் எதுவும் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மஹவெல மாரகம்முல்ல பகுதியிலுள்ள கிணறு ஒன்றினுள் இருந்து ஆண் ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை இதனிடையே கிரிந்திவெலப் பகுதியிலுள்ள கிணறு ஒன்றினுள் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சடலம் உளநலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவருடையது என்பது

விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# சரணாலயங்களை பாதுகாப்பதற்கு 400 சிவில் படைவீரர்கள் கடமையில்

(கொழும்பு)

தேசிய வன விலங்குகள் சரணாலயங்களுக்கான பாதுகாப்பு கடமைகளில் 400 சிவில் படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

வன விலங்குகள் வேட்டையாடப்படுகின்றமை உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத நவடிக்கைகளை தடுப்பதே இதன் நோக்கம் என வன விலங்குகள் ஜீவராசிகள் பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம் எச்.டீ ரத்நாயக்க கூறியுள்ளார். காட்டு யானைகளின் தொல்லையால் மக்கள் சிரமத்தை எதிர்நோக்கம் பகுதிகளிலுள்ள மின்வேலிகளின் பராமரிப்புப் பணிகளிலும் சிவில் பாதுகாப்பு படை வீரர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வன ஜீவராசிகள் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து சிவில்ப் பாதுகாப்பு படை வீரர்கள் கடமைகளை மேற்கொள்வார்கள் என வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார்.

## துவிச்சக்கரவண்டி உற்பத்தி நிலையம் வவுனியா மெனிக்பாமில் நிர்மாணிப்பு

(வவுனியா)

வவுனியாவில் ஐந்து கோடி ரூபா செலவில் துவிச்சக்கர வண்டியினை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்திய உயர் ஸ்தானிகராலயமும் தனியார் நிறுவனம் ஒன்றும் இணைந்து இந்த உற்பத்தியினை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவின் மெனிக்பாம் பிரதேசத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரை ஏக்கர் நிலத்தில் இந்தத் தொழிற்சாலை நிர்மாணிக் கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. எதிர்வரும் 6 மாத காலப்பகுதியினுள் துவிச்சக்கர வண்டி உற்பத்தி நடவடிக்கை கள் ஆரம்பிக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 400 தொல்பொருள் பிரதேசங்கள் வடக்கு மாகாணத்தில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வடபிராந்தியத்தில் 400 க்கும் அதிகமான தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள் இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் செனரத் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, முல்லைத்தீவில் 87 இடங்களும், வவுனியாவில் 110 இடங்களும், 40 இடங்கள் மன்னாரிலும், யாழ்ப்பாணத்தில் 50இடங்களும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.

அதேவேளை, தொடர்ந்தும் ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் 2.5 மில்லியன் ரூபா நிதி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அடிப்படை வசதிகள் இன்றி சிரமப்படும் காஞ்சிபுர மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி காஞ்சிபுரம் பிரதேச மக்கள் தாம் அடிப்படை வசதிகள் இன்றி பல்வேறு சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் தற்போது 60 குடும்பங்களைச் சேர்ந்த 240 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகள், குடிநீர், மல்சலகூடம் மற்றும் சுகாதார வசதிகள் எதுவுமில்லாத நிலையில் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு தாம் நாளாந்தம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு தேவைகளையும் பெற்றுக்கொள்வதற்கு சுமார் 15 கிலோ மீற்றர் தூரம் சென்றே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் இருப்பது தமக்குப் பெரும் சிரமமாக இருப்பதாகவும் இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, போக்குவரத்து வசதிகள் இல்லாது இப்பிரதேசத்திலுள்ள 100இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கால்நடையாகச் சென்றே தமது கல்வியைத் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இக்கிராம மக்களினுடைய தேவைகளைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் அடிப்படை வசதிகளையாவது ஏற்படுத்தித் தரவேண்டும் என இக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (உ-கே)

# நீர்மட்டம் குறைவடையும் குடாநாட்டுக் கிணறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள நீர் நிலைகளில் தண்ணீர் வற்றியுள்ளதால் குடியிருப்புக் கிணறுகளில் நீர் மட்டமும் மிக மிக குறைந்து செல்கிறது. கடும் வறட்சி, அதிகரித்த வெப்பம் போன்றவற்றினால் நீர் நிலைகள் மற்றும் குளங்களில் தண்ணீர் வற்றிக் காணப்படுகின்றன. இந்த தண்ணீர் முழுமையாக வற்றியதால் கிணறுகளில் தண்ணீர் மட்டம் வெகுவாகக் குறைந்து செல்கின்றன.

அநேகமாக மக்களின் குடியிருப்புக் கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைந்ததால் மக்களின் தண்ணீர்ப் பாவனைக்குப் போதிய தண்ணீரைப் பெறுவதற்குச் சிரமப்பட்டும் வருகின்றனர். கடந்த வாரத்தில் பரவலாக பெய்த மழையைத் தொடர்ந்து கடும் வறட்சியும் வெப்பமும் மிக மிக அதிகரித்துக் காணப்படுகிறது.

இதேவேளை, தீவுப் பகுதியில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடும் பற்றாக்குறையும் நிலவி வருகின்றன. மண்டைதீவு, அல்லைப்பிட்டி, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, வேலணை போன்ற இடங்களில் உள்ள சில நன்னீர்க் கிணறுகளில் தண்ணீருக்கு பெரும் பற்றாக்குறை நிலவி வருகின்றன. (வி)

## சிறப்பாக நடைபெற்ற பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித பற்றிக்ஸ் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் பெற்றோர் தின விழாவும் நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் அருட்திரு எம். ஜேறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஏசியன் எலைன்ஸ் இன்சூரன்ஸ் இயக்குநர் வி. வித்தியாசங்கர் சர்மா பிரதம விருந்தினராகவும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), திருமதி சந்யா வித்தியாசங்கர் சர்மா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பரிசளிப்பு நிகழ்வும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## உலக வங்கியினால் வழங்கப்பட்ட

# வீட்டுத் திட்டங்களைக் கைவிட்டவர்களுக்கு வேறு வீட்டுத் திட்டம் வழங்கப்படமாட்டாது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு முதல் உலக வங்கியினால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்ட உதவிகளைப பெற்றவர்களில் இது வரை வீட்டுத் திட்டத்தினைப் பூர்த்தி செய்யாதவர்களுக்கு எந்தத் திட்டத்தின் கீழும் வீட்டுத் திட்ட வசதிக்ள் வழங்கப்படமாட்டாது என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் நேரப்த் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் 134 பயனாளிகள் தமக்குக் கிடைத்த வீட்டுத் திட்டத்தைப் பெற்று கட்டி முடிக்காது இடையில் கைவிட்டுள்ளனர்.

கடந்த 2006ஆம் ஆண்டு முதல் உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் வீட்டு வசதிகள் இன்றி வாழும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வீட்டுத் திட்ட வசதிகள் வழங்கப்பட்டது.

இதில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 39 பயனாளிகளுக்கும், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 40 பயனாளிகளுக்கும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 27 பயனாளிகளுக்கும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 28 பயனாளிகளுக்கும் என 134 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

இவர்கள் வீடுகளை அமைப்பதற்கென ஒரு தொகுதி பணத்தை இவ்வீட்டுத் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பணிகளை மேற்கொண்ட நிலையில் இதுவரை வீடுகளை கட்டி முடிக்கவில்லை.

இந்த நிலையில் உலக வங்கியினூடாக வழங்கப்படுகின்ற நிதி மூலம் வீடுகளைக் கட்டி முடிக்காத பயனாளிகளுக்கு எதிர்காலத்தில் எந்த நிறுவனமும் வீட்டுத் திட்ட வசதிகளை வழங்கமாட்டாது என அவர மேலும் தெரிவித்தார். (உ.கே)

## தொலைபேசி இணைப்புக்களை வழங்க பரிவர்த்தனை நிலையங்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கான கேபிள் தொலைபேசி இணைப்பை வழங்குவதற்கு தற்போது நவீன பரிவர்த்தன நிலையங்கள் அமைக்கும் பணிகள் துரிதமாக்கப்பட்டுள்ளன.

இந்த நவீன பரிவர்த்தனை நிலையங்கள் ஊடாக புதிய இணைப்புக்கள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ் பிராந்திய அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, அச்சுவேலி, அரியாலை, கொக்குவில் போன்ற பகுதிகளில் அமைக்கப்படும் இந்த நவீன பரிவர்த்தனை அலகு மூலம் புதிய இணைப்புக்கள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

குடாநாடு பூராகவும் இந்தக் கேபிள் தொலைபேசி இணைப்பை முழுமையாக விஸ்தரிக்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

புதிய இணைப்பு வழங்காத பிரதேசங்களுக்கும் விரைவில் இணைப்பை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## வினைத்திறன் கருத்தரங்கு

(அச்சுவேலி)

இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையை இலக்காகக் கொண்டு கல்வி அமைச்சரின் ஆலோசனைக்கமைய மாணவர்களின் பெறுபேற்று வீதத்தை உயர்த்துவதற்காக தமிழ்/சிங்களம், விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம், வரலாறு ஆகிய பாடங்களிற்கான விசேட கருத்தரங்குகள் நாடளாவிய ரீதியில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நடத்தப்படவுள்ளது.

வயலக் கல்விப் பணிப்பாளர்களின் வழிகாட்டலுடன் நடைபெறவுள்ள இக்கருத்தரங்குகள் குறிப்பிட்ட மத்திய நிலையங்களில் 100 - 150 மாணவர்களைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

கருத்தரங்குகள் நடைபெறும் தினங்களில் உரிய பாடப் பொறுப்பாசிரியர்கள், மாணவர்களை மத்திய நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதுடன் கருத்தரங்குகள் சிறப்பாகவும் வி[illegible]திறனுடையதாகவும் அமைய ஒத்துழைக்குமாறு ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யாழ். வலய பாடசாலைகளுக்கான கருத்தரங்கில் தமிழ்மொழி, சிங்கள மொழி எதிர்வரும் முதலாம் திகதியும், விஞ்ஞானம் 8ஆம் திகதியும்; ஆங்கிலம் 15ஆம் திகதியும் கணிதம் 22ஆம் திகதியும் வரலாறு 29ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு குறிப்பிட்ட தொகைக்கு அதிக மாணவர்களையுடைய பாடசாலைகளில் தனியாகவும் குறைந்த மாணவர் தொகையை உடைய பாடசாலைகள் இணைப்பு பாடசாலைகளிலும் நடத்தப்படவுள்ளது. (03)






சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற முன்னாள் அதிபர் வி. சிவசுப்பிரமணியத்தின் நினைவுப் பேருரை நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத் தலைவர் பேரறிஞர் இ. நந்தகுமார் நினைவுப் பேருரை ஆற்றுவதையும், மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காலாணம். (44)

## தார்ஊற்றி செப்பனிடப்படும் மணியந்தோட்டம் பிரதான வீதி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணியந்தோட்டத்தின் பிரதான வீதி தார் வீதியாக மாற்றியமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றது.

நல்லூர்ப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் இந்தப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மனியந்தோட்டச் சந்தியில் இருந்து அரியாலை கிழக்கு நாவலடி வரைக்குமான பிரதான வீதி இவ்வாறு தார் வீதியாக மாற்றப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் வீதிப்புனரமைப்பு மற்றும் இதர அத்தியாவசியப் பணிகள் யாவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (வி)

# புலம்பெயர்ந்தவர்களில் ஒருசிலரே பிறந்த மண்ணுக்கு உதவுகின்றனர்

## அதிபர் சு. சண்முககுமார்

(யாழ். நிருபர்)

புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து பலரும் வந்து போகின்ற நிலையில் இவர்களில் ஒரு சிலரே நல்ல மனத்துடன் தமது பிறந்த மண்ணின் பிரதேச அபிவிருத்திக்கு உதவுகிறார்கள் இவர்களின் நற்பணி பாராட்டுக்குரியது.

இவ்வாறு கோண்டாவில் நிதாகோகுலம் பக்தி வேதாந்த சிறுவர் அபிவிருத்தி நிலையத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய கோண்டாவில் இந்து மகாவித்தியாலய அதிபர் சு. சண்முககுமார் குறிப்பிட்டார்.

கோண்டாவில் நந்தாவில் அம்மன் கோவில் வீதியில் சர்வதேச கிருஷ்ண பக்திக் கழக ஸ்தாபக ஆச்சாரியார் அருட்திரு ஏ.சி. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்

கடந்த 30 வருடகால யுத்த நடவடிக்கைகளினால் எமது மக்கள் பல துன்பங்களை அனுபவித்து, தற்போது மூச்சு விடத் தொடங்கியுள்ளார்கள் இன்றைய சமாதானச் சூழலில் யுத்தத்தினால் பெற்றோரை இழந்து ஆதரவற்ற அநாதைகளாக நிற்கும் சிறுவர்களைப் பராமரிக்க இது போன்ற சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் அவசியமாகும்.

நூற்றாண்டுகளின் முன் தோன்றிய பக்தி இயக்கம் இந்தியாவிலும், கொழும்பிலும் நீண்ட காலமாகப் பணி செய்து தற்போது யாழ்ப்பாணத்தில் அதன் கிளையை நிறுவி அநாதைச் சிறுவர்களைப் பராமரிக்க முன்வந்துள்ளமை பாராட்டுக்குரியது. என்றார். (10)



அண்மையில் சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீடமைப்பு கடனுக்கான காசோலை வழங்கும் நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர் பயனாளி ஒருவருக்கு காசோலை வழங்குவதை காணலாம். (11)

# வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுக்க சகலரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களையும், வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்லும் பட்சத்தில் அவற்றுக்குப் பூரண ஆதரவை வழங்குவோம். இதனையே ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களும் எமக்கு வலியுறுத்தி யுள்ளார் என ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச சபை உறுப்பினரான அம்பலம் ரவீந்திரதசான் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் இரண்டாவது அமர்வு அண்மையில் பிரதேச சபைத் தலைவர் பரமலிங்கம் வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இன்னமும் குடிதண்ணீர், மின்சாரம், சுகாதார வசதிகள் செய்யப்பட வேண்டிய நிலையில் இருப்பதுடன், பல குடும்பங்களுக்கு மலசல கூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகளை சகலருடனும் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றோம்.

அபிவிருத்தி மற்றும் மக்கள் நலன்சார் திட்டங்களுக்காக அரசாங்கம் அதிகமான நிதியை வடபகுதிக்கு ஒதுக்கீடு செய்துள்ள நிலையில் சுயநல அரசியலுக்காக அரசுடன் முரண்பட்டு, மக்களின் நலன்களைப் புறக்கணிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என கேட்டுக்கொண்டார்.

# நீதிமன்ற பகிஷ்கரிப்பு இன்றும் தொடரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றத்தில் அண் மையில் நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரினால் தாக்கப்பட்ட தைத் தொடர்ந்து சட்டத்தரணிகள் சங்கம் சம்பவம் நடைபெற்ற தினத்திலிருந்து தொடர்ச்சியாக பணிப்பகிஷ்கரிப்பை மேற் கொண்டு வருகின்றனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர் புடைய பொலிஸாருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிப்பதில் தாமதம், நீதிமன்ற அவமதிப்பு என்ற வாதங்களை முன்வைத்தே இப்பணிப்பகிஷ்கரிப்பினை தொடர்ந்து முன்னெடுப்பதாக சட் டத்தரணிகள் சங்கத்தில் அங்கம் வகிக்கும் சட்டத்தரணி ஒருவர் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

இப்பிரச்சினைக்கு முறையாக தீர்வு காணப்பட்டபின் மேற்படி பகிஷ்கரிப்பு குறித்து முடிவெடுக் கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் இன்றும் தினமும் பகிஷ்கரிப்பு தொடரவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எப்.எஸ்)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்
(26.09.2011 – திங்கட்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
புரட்டாதி 09 ஆம் நாள்.
இராகுகாலம் 7.32–9.02, சுபநேரம் 12.02 –1.32,
நட்சத்திரம்: பூரம் மு.இ.7.47 வரை
திதி: சதுர்த்தி மு.இ 7.51 வரை
கேதாரேஸ்வர விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணம் வரும் தேடிப்போதல், இனசன அழைப்பு, விருந்துபசாரம், தேக ஆரோக்கியம்.

ரிஷபம:– தொழில் முடக்கம், பணக்கஷ்டம், உறவினர் வருகை, குடும்பத்தில் கவலை, உடல் உபாதை.

மிதுனம் :– பணம் வரும், மருத்துவச் செலவு, தேக சுகக்குறைவு, அநீதியிழைத்தல், வீண் அலைச்சல்.

கடகம்:– குடும்பத்தில் கவலை, பணமுடை, எதிரி தென்படல், சுற்றத்தார் அதரவு, மனச் சஞ்சலம்.

சிம்மம்:– பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் விருத்தி, இனசன அழைப்பு, கடன் வசூல்.

கன்னி :– குடும்பத்தில் கவலை, பணமுடை, மனக்குறை, அதிகாரப் போட்டி, வீண் அலைச்சல்,

துலாம் :–பணக் கஷ்டம், சகோதரவெறுப்பு, உடல் உபாதை, அதிகாரிகள் துயர், வசதிக்குறைவு.

விருச்சிகம்:– குடும்பத்தில், குதூகலம், பணம் வரும், வாய்ப்புக்கிடைத்தல், புதுப்பொருள் சேரும், மன நிம்மதி.

தனுசு:– பணமுடை, நினைத்ததைச் சாதித்தல், சுற்றத்தார் ஆதரவு, பிணக்குத்தீர்த்தல், உடல் உபாதை.

மகரம:– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், மன நிம்மதி, சுற்றத்தார் ஆதரவு, தேடிப்போதல்.

கும்பம் :– குடும்பத்தில் கவலை, பணக்கஷ்டம், வாய்ப்பு இழத்தல், உடல் உபாதை, நண்பர் வருகை.

மீனம் :– பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, வெளிநாட்டு உதவி நினைத்ததைச் சாதித்தல், மன நிம்மதி.

# குறுக்கு வீதிகள் புனர் நிர்மாணம்

(நீர்வேலி)

வலிகிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட அனேகமான குறுக்கு வீதிகள் ஒழுங்கைகள் என்பன புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த பல ஆண்டுகளாக புனர்நிர்மாணம் இன்றிக் காணப்பட்ட இந்த விதீகள் தற்போது தாரினால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இவ் வீதிப் புனரமைப்புக்கென அனேகமான வீதிகளுக்கு கற்கள் பறிக்கப்பட்டு வருவதுடன் புனரமைப்புப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. (வி)

# கவிதைப் போட்டி


(யாழ்ப்பாணம்)

வடமாகாண முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து 21 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு புலம்பெயர்ந்த இலங்கை முஸ்லீம் சம்மேளனமும், யாழ். முஸ்லீம் வலைத்தளமும் இணைந்து கவிதைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

கவிதைகள் மரபு சார்ந்ததாகவும் அல்லது புதுக்கவிதையாகவும் சுருக்கமாகவும் இருத்தல் வேண்டும். இப்போட்டியில் எவரும் பங்குபற்றலாம் கவிதைகள் வடக்கு முஸ்லீம்களின் வெளியேற்றம் அதனால் ஏற்பட்ட அவலங்கள், தற்போதையநிலை, எதிர்கால மாற்றத்தைக் கருப்பொருளாக வைத்து அமைக்கப் படவேண்டும்.

இப்போட்டியில் முதலிடம் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபாவும், 2 ஆம் இடம் பெறுபவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் 3ஆம் இடத்தைப்பெறுபவருக்கு 2 ஆயிரத்து 500ரூபாவும் அத்துடன் பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் தமது பெயர் முகவரி, தொழில், வர்ணப்படம், தொலைபேசி இலக்கம் என்பவை தொடர்பான விபரங்களை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் ஏ.ஏ.எம். சாஜித் 48 பேர்ஸி டயஸ் மாவத்தை மாபோல வத்தளை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (உ-105)



## பரமர் சங்கமம்

இதுகும் யாழ்ப்பாண பெரியாசுப்பத்திரியில் நடந்த சம்பவம்தான் எனக்கு நல்லாத்தெரிஞ்ச நண்பர் தனக்கேற்பட்ட அனுபவத்தைச் சொன்னார்

அவர் சொல்லச் சொல்ல எனக்குள் ஒரு திரைப்படக் காட்சி வளர்ந்தது.

நானொருபடத்தயாரிப்பாளரா இருந்தா படத்தில ஒரு காட்சியாச் சேத்திருப்பன்.

ஏன் நாடகத்துக்குக் கூட நல்லா இருக்கும் அப்படியான ஆக்கள் என்ர அனுமதி வேண்டுமெண்டு மினக்டொமல் தாராளமா நாடகமாக்கலாம்.

கதையைக் கேளுங்க!

அவற்றை பெண்சாதி காலும், கையும் இழுத்து பேச்சும் வராத பாரிசவாத நோயாளி. இவருக்கு 70 வயதிருக்கும் அவாவுக்கும் 65 வயதிருக்க வேணும் கிளினிக் முறைக்கு அவர்தான் ஆட்டோவில கூட்டிக் கொண்டு போய்: கூட்டிக்கொண்டு வாறது.

ஒருமுறை கூட்டிக்கொண்டுபோய் நேரகாலம் இருந்தால வெளிநோயாளர் பிரிவில கிடந்த வாங்கில மனுசியை இருந்திப் போட்டு சோடா வாங்கிவரப் போட்டார் இவர்.

திரும்பி வந்து பாத்தவருக்குத் 'திக்' கெண்டது. அவ எழும்பிக் கிளம்பிப் போகேலாதவா எப்பிடிக் காணாமைப் போனா.

இவருக்கு வந்த வெப்பிகாரத்தில இதுல இருத்தி விட்டுப் போன மனுசி என்னண்டுபோனா...

எழும்பி நடக்கக்கிடக்க முடியாத மனுசி அப்பிடி இப்பிடி யெண்டு தடம் புரண்டிருக்கிறார்.

.என்ன நடந்தேண்டா இவர் கடைக்குப் போனாப் பின்னால தள்ளுவண்டிலைக் கொண்டந்த ஆசுப்பத்திரி சிப்பந்தி மனுசி வார்ட்டில தங்கத்தான் வந்திருக்கெண்டு வாட்டுக்கு ஏத்திக்கொண்டு போட்டான்.

பிறகு அந்தச் சிப்பந்தி மறுபடியும் வந்தபோதுதான் விசயம் வெளிப்பட்டிச்சு. அவனை இவர் பேசு பேசெண்டு பேசிப்போட்டு வாட்டுக்கு ஓடிப் போனார் மனுசி வாட்டில அதுவும் கட்டில் ஒன்றில சிக்காராப் படுத்துக் கிடந்திருக்கு மனுசிக்கும் பேசி வாட்டில நிண்ட நேர்ஸ், அற்றண்டன் எல்லாருக்கும் பேசினாப்போல முடியிற காரியமே?

வாட்டில இருக்கப் பதிஞ்சா உடனம் விடுவினமே மறுபடி வாட்டுக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி வந்து துண்டு வெட்டும் வரை காத்திருக்கத்தனே வேணும்.

ரெண்டு பேரும் வாங்கி வந்தசோடாவைக் குடிச்சுக்கொண்டிருந்து நேரத்தைக் கழிச்சுப் போட்டு அண்டைக்குக் கிளினிக்குக்கும் காட்டாமல் பின்னேரமாச் செக்கலுக்கை வீடு வந்து சேந்தினமாம்.

எப்படி அனுபவம் இப்பிடி உங்களுக்கும் ஏதோவொரு சந்தர்ப்பங்களில ஏற்பட்டிருக்கும் இல்லையே!

# தேசிய மட்ட ருவென்ரி 20 கிரிக்கெட் கிண்ணத்தை வென்றது பற்றிக்ஸ்

(யாழ்ப்பாணம்)

நீர்கொழும்பு மாரிஸ்ரேலா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட தேசிய ரீதியில் அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி கைப்பற்றிக் கொண்டது.

16 முன்னணிப் பாடசாலைகள் அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடர் நீர்கொழும்பு மாரிஸ்ரேலா கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் கடந்த 17,18ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் போட்டியாக இத்தொடர் நடத்தப்பட்டது.

இதில் களுத்துறை திருச்சிலுவை கல்லூரி அணியையும், கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரி அணியையும், மருதானை சென் ஜோசப் கல்லூரி அணியையும் வெற்றிகொண்ட யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டியில் கொழும்பு சென் பெனடிற் கல்லூரி அணியும், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய சென் பெனடிற் கல்லூரி அணி, ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக் கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி சிறப்பான ஓட்ட எண்ணிக்கையை சாரசரியாகப் பெற்று வந்து. இருப்பினும் கடைசி இரண்டு பந்துகளில் ஏழு ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டால் வெற்றி என்ற நிலையில் இருந்த சென் பற்றிக்ஸ் கல்லூரி நோபேட் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றி இலங்கை அடைந்தது. போட்டியின் நான்காவது ஓவரின் ஐந்தாவது பந்து சிறப்பாக சிக்ஸர் ஒன்றைப் பெற்ற நோபேட் இறுதிப் பந்தில் ஒரு ஓட்டத்தைப் பெற்று அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.





இறுதியில் ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியின் 29 ஓட்டங்களைப் பெற்று அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்ற நோர்பேட் ஆட்ட நாயகனாகவும், இத்தொடரில் 137 ஓட்டங்களையும், ஆறு விக் கெட்டுக்களையும் பெற்ற ஜே. கிளிங்டன் தொடர் நாயகனாகவும் தெரிவானார்கள்.

## காலிறுதியில் ஐயனார் அணி

(யாழ்ப்பாணம்)

வேலணைத்துறையூர் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கமும், ஐயனார் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு ஐயனார் அணி தகுதி பெற்றுள்ளது.

ஐயனார் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் ஐயனார் அணியும் சங்குப்பிட்டி சன்னிஸ்ரார் அணியும் மோதின. இதில் சிறப்பாக ஆடிய ஐயனார் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

## படையினர் - பொதுமக்கள் நல்லுறவு ருவென்ரி 20 காமாட்சி, நியூஸ்ரார், ஸ்ரான்லி அணிகள் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். படைகளின் தலைமையகம் மற்றும் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கமும் இணைந்து நடத்தும் படையினர் - பொதுமக்கள் நல்லுறவு ருவென்ரி 20 வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

கட்டுவனில் அமைந்துள்ள பாதுகாப்புப் படையினரின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற முதல் நாள் போட்டிகளில் காமாட்சி, நியூஸ்ரார், ஸ்ரான்லி அணிகள் வெற்றிபெற்றன.

முதலாவதாக நடைபெற்ற போட்டியில் காமாட்சி அணியை எதிர்த்து வளர்மதி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வளர்மதி அணி 19.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஜந்தன், கேதீஸ்வரன் தலா 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தீபன், பிரசன்னா தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய காமாட்சி அணி 15.1 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரதீசன் 62, ஜனார்த்தன் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் நியூஸ்ரார் அணியும் திருநெல்வேலி கிரிக்கட் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய திருநெல்வேலி அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சாந்தன் 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பகிதரன் மூன்று, நிசா, தீபன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய நியூஸ்ரார் அணி 19ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் நிசா 44, மோகன் 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது கருமன் 31 ஓட்டங்களைப் பெற்றார்.

மற்றுமொரு போட்டியில் ஸ்கந்தாஸ்ரார் அணியும் ஸ்ரான்லி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 18.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குறிப்பிடும்படி எந்தவொரு வீரரும் ஓட்டங்களைப் பெறவில்லை. பந்து வீச்சில் சுரேஷ், மாதவன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய ஸ்ரான்லி அணி 11.4 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் எனோஜன் 39, சுதர்சன் 31 ஓட்டங்களைப் பெற்றனர்.


இப்போட்டித் தொடரின் போட்டிகள் யாவும் ஒவ்வொரு சனிக்கிழமையே நடைபெறும் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட முன்பள்ளிச் சிறார்களின் மழலைகள் விளையாட்டு விழா நேற்று முன்தினம் கிளிநொச்சி மகாவித் தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் சிறார்களின் விளையாட்டு நிகழ்வொன்றைக் காணலாம்.

## சாதிப்பதற்கு வயது ஒரு தடையில்லை தங்கப் பதக்கம் வென்றது மகிழ்ச்சி!

### கூறுகிறார் கராத்தேயில் தங்கம் வென்ற கணேஷ்



நான் தங்கப்பதக்கம் வெல்வேன் என நான் ஒருபோதும் எண்ணவில்லை. இந்த வயத்தில் தங்கம் வென்றது மகிழ்ச்சி அளிக்கும் அதேவேளை, சாதிப்பதற்கு வயது ஒரு தடையும் இல்லை என கராத்தேப் போட்டியில் தங்கம் வென்ற கணேஷ் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் அண்மையில் நடைபெற்ற 22 ஆவது சர்வதேச கராத்தே சம்பியன்ஷிப் சுற்றுப்போட்டியில் இலங்கையரான செல்லத்துரை கணேசலிங்கம் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

அமெரிக்காவின் இண்டியானா மாநிலத்தில் இச்சுற்றுப்போட்டி நடைபெற்றது. இதில் 62 வயதான கணேசலிங்கம், இப்போட்டியில் தன்னிலும் பாதி வயதுகொண்ட போட்டியாளர்களை தோற்கடித்து இப்பதக்கத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது பிரிட்டனில் வசித்துவரும் இவர் வெற்றி குறித்து கருத்துத் தெரிவிக்கையில், எனக்கு 23 வயதாக இருந்தபோது இலங்கையில் வங்கி வேலைநிறுத்தமொன்று நடைபெற்ற காலத்தில் தான் கராத்தே கற்க ஆரம்பித்தேன்.

இந்நாட்டிற்கு வந்தபின் நான் கராத்தே சுற்றுப்போட்டியொன்றை பார்வையிடச் சென்றேன். அவர்களை என்னால் தோற்கடிக்க முடியும் எனத் தோன்றியது. கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறுவதற்காக ஏதாவது செய்ய வேண்டும் என்பது என் விருப்பம். ஆனால் நான் எப்போதும் வேலை செய்து கொண்டிருந்ததால் அதற்கு நேரம் கிடைக்கவில்லை எனத் அவர் தெரிவித்துள்ளார்.

## பகிரங்க மன்னிப்பு கேட்கவேண்டும் அக்தர்




(புதுடில்லி)

இந்தியாவின் சச்சின், ராகுல் ராவிட் ஆகியோரிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் அக்தர் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என்று ஐ.பி.எல். அமைப்பின் தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

சச்சினுக்கு அக்தரிடம் இருந்து எந்தச் சான்றிதழும் தேவையில்லை. சச்சின் சிறந்த வீரர் என கிரிக்கெட்டின் பிதாமகனான டொன் பிரட்மனே பாராட்டியுள்ளார். அதனால் அவருக்கு யாரும் சான்றிதழ் கொடுக்கத் தேவையில்லை. அவர் அக்தருக்கு எதையும் நிரூபிக்க வேண்டிய அவசியமும் இல்லை. சச்சின் இப்போது சாதனையின் சிகரத்தை அடைந்துவிட்டார். இதேபோல் தான் ராவிடும். அவர் இப்போதும் சிறப்பாக விளையாடி வருகிறார். எனவே சச்சின், ராவிட்டைப் பற்றி தவறான கருத்துத் தெரிவித்ததற்காக அக்தர் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எங்கிருந்தாலும் பிரச்சினைக்குரியவர்



(லாகூர்)

அக்தரைப் பொறுத்தவரை அணியில் இருந்தாலும் பிரச்சினை. இப்போது அணியில் இல்லாவிட்டாலும் கூட பிரச்சினை தான் என்று பாகிஸ்தான் முன்னாள் கப்டன் வசிம் அக்ரம் தெரிவித்தார்.

உலகின் எந்த ஒரு முன்னணி துடுப்பாட்ட வீரரும் எந்த ஒரு பந்து வீச்சாளருக்கும் பயப்படமாட்டார். டெண்டுல்கர் பற்றி அவர் கூறுவது நம்பும்படி இல்லை.

ஆனால் டெண்டுல்கர் போன்ற வீரர் உலகின் எந்த பந்து வீச்சாளார்களையும் கண்டு அஞ்சமாட்டார்கள். புத்தகத்தை விற்பதற்காக அக்தர் என்ன வேண்டும் என்றாலும் சொல்லலாம். அது என்னையோ அல்லது டெண்டுல்கரையோ எந்த வகையிலும் பாதிக்காது.

அக்தரைப் பொறுத்தவரை அணியில் இருந்தாலும் பிரச்சினை. இப்போது அணியில் இல்லாவிட்டாலும் கூட பிரச்சினை தான். நான் தான் அவரை கிரிக்கெட் ஆட வைத்தேன். அவரது மட்டத்திற்கு இறங்கி வந்து அவரை இழிவுப்படுத்த நான் விரும்பவில்லை. விளையாட்டு வீரர்களுக்கு என்று எழுதப் படாத ஒரு ஒப்பந்தம் உள்ளது. அதாவது அடுத்த வீரர்களைப் பற்றிய அந்தரங்க விடயங்களை ஊடகங்களிடம் சொல்லக் கூடாது. சிலர் இதில் வேறுபட்டு இருக்கலாம். ஆனால் இந்த விடயத்தில் நான் அக்தரிடம் இருந்து வித்தியாசமானவன். அக்தர் தான் விரும்பியபடி எதுவும் சொல்லிட்டு போகட்டும். அது பற்றி எனக்கு கவலை இல்லை எனவும் தெரிவித்தார்.

## சச்சின் குறித்து தவறாக எழுதவில்லை



(லாகூர்)

சச்சின் பற்றி நான் ஒன்றும் தவறாக எதுவும் எழுதவில்லை. புத்தகத்தை முழுவதுமாகப் படித்துவிட்ட பின்னரே யாரென்றாலும் விமர்சிக்க வேண்டும் என அக்தர் தெரிவித்துள்ளார்.

எனது வேகப் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் சச்சின் திணறினார். குறிப்பாக, பவுன்சரை எதிர்கொள்ளப் பயப்பட்டார். சச்சின், ராவிட் இருவரும் நன்றாக விளையாடினாலும் அணியின் வெற்றியை உறுதி செய்வதில் அவர்கள் எப்போதுமே தடுமாறுவார்கள்.

எல்லா பாகிஸ்தான் பந்து வீச்சாளார்களுமே பந்தை சேதப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்று குறிப்பிட்டிருப்பதாக தகவல் வெளியானதால் பெரும் சர்ச்சை எழுந்தது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அக்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சச்சின் மகத்தான வீரர். அவரைப் பற்றி தரக்குறைவாக எதுவும் எழுதவில்லை.

ஒரு குறிப்பிட்ட போட்டியின்போது நடந்த சம்பவத்தை, அந்த சூழ்நிலையில் நான் எப்படி உணர்ந்தேன் என்பதை மட்டுமே கூறியிருக்கிறேன். முழங்கை காயத்தால் அவதிப்பட்ட சச்சினை பவுன்சர் வீசி அச்சுறுத்தினேன் என்றுதான் சொல்லியிருக்கிறேன். புத்தகத்தை முழுவதுமாகப் படித்துவிட்டு பிறகு விமர்சிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## கருத்துக்கூறி கௌரவத்தை குறைக்கவிரும்பவில்லை



(மும்பை)


என்னைப் பற்றி அக்தர் வெளியிட்டுள்ள கூற்றுக் குறித்து கருத்துத் தெரிவித்து எனது கௌரவத்தைக் குறைத்துக்கொள்ள நான் விரும்பவில்லை என்று சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

அக்தரின் சுயதரிதைப் புத்தகத்தில் எனது பந்து வீச்சைக் கண்டு சச்சின் அஞ்சினார் எனக் குறிப்பிட்டுள்ளது குறித்து ஊடகவியலாளர் கருத்துக் கேட்டபோதே சச்சின் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



சீனாவில் நிறைவடைந்த குவாங்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் தென்னாபிரிக்காவின் சனலே சீப்பர்ஸ்.

## ஷாங்காய் மாஸ்டர்ஸ் தொடர் விலகிக்கொண்டார் பெடரர்



(பரிஸ்)

அடுத்த மாதம் நடக்கவுள்ள ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டித் தொடரிலிருந்து விலகுவதாக முன்னணி வீரர் ரோஜர் பெடரர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஏராளமான போட்டிகளில் விளையாடி உள்ள நிலையில், காயம் காரணமாக இப்போது ஓய்வெடுத்து வருகிறேன்.

இன்னும் சில நாட்களுக்கு முழுவதுமாக ஓய்வெடுக்க வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தி உள்ளதால், ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டி தொடரிலிருந்து விலக முடிவு செய்துள்ளேன். எனது அபிமானப் போட்டியில் இருந்து விலக நேரிட்டுள்ளது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

விரைவில் முழு உடல்தகுதியுடன் ஏடிபி போட்டிகளில் களமிறங்க முடியும் என நம்புகிறேன். இவ்வாறு பெடரர் கூறினார்.

இளம் வீரர்கள் ஜோகோவிச் (சேர்பியா), நடால் (ஸ்பெயின்) இருவரின் கடும் போட்டி காரணமாக பெடரர் முதல் நிலை அந்தஸ்தை இழந்ததுடன் இந்த ஆண்டு கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் பெரிதாக சாதிக்க முடியாமல் தடுமாறினார்.

ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் ஒக்டோபர் ஒன்பதாம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜப்பானில் இன்று நடைபெறவுள்ள பசுபிக் ரென்னிஸ் தொடரில் சாதிப்பதற்கு தீவிர பயிற்சியில் ஈடுபடும் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி.

## ஏமாற்றம் தந்த தோல்வி

(டோக்கியோ)

அரையிறுதியில் ஏற்பட்ட தோல்வி மிகுந்த வேதனை தரும் விடயமாகவுள்ளது. இதிலிருந்து நல்ல பாடங்களைக் கற்றுள்ளேன். தொடர்ந்து நடைபெறும் தொடர்களில் நிச்சயம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி கிண்ணத்தை வெல்வேன் என்று சாய்னா நேவால் தெரிவித்தார்.




ஜப்பானில் நடைபெற்ற பட்மின்ரன் தொடரில் அரையிறுதியில் தோல்வியடைந்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜூலியன் ஷென்க் சிறந்த வீராங்கனைதான். அவரின் ஆட்டம் நம்ப முடியாத வகையில் இருந்தது. இருப்பினும் சில தவறுகளை நான் செய்துவிட்டேன். இல்லையேல் வெற்றி எனக்குக் கிடைத்திருக்கும்.

தொடர்ந்து இறுதிப் போட்டி, அரையிறுதிப் போட்டிகளில் தோல்வியடைந்து கிண்ணம் வெல்லாமல் திரும்புவது ஏமாற்றமே. இதனை விரைவில் ஈடுசெய்யும் வகையில் எனது ஆட்டத்தை மேம்படுத்துவேன் என்றும் அவர் தெரிவித்தார்

## தொடர்ந்து வெல்வதற்கு போதியளவு ஓய்வு தேவை




(லண்டன்)

வீரர்களுக்குத் தேவையான ஓய்வு வழங்கப்பட்டல் மட்டுமே எந்தவொரு போட்டியிலும் சிறந்த அணியால் தொடர்ந்து வெல்ல முடியும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

இந்திய வீரர்கள் ஐ.பி.எல். போட்டியில் அதிகம் விளையாடியதால் அவர்களது திறமை பாதித்து விட்டது. இதனால் தான் அவர்களால் இங்கிலாந்தில் சரியாக ஆட முடியவில்லை. இந்திய அணி டெஸ்டில் தலைசிறந்த அணியாக இருந்தது. டெஸ்டில் ஒரு அணி சிறப்பாக ஆடினால் அந்த அணியால் ஒரு நாள் போட்டியில் எளிதாக வெற்றியைப் பெற முடியும்.

ஆனாலும், இந்திய அணி ஒரு நாள் போட்டியில் சரியாக ஆடவில்லை. வீரர்களை அதிக அளவில் ஐ.பி.எல். போட்டியில் பயன்படுத்தி அவர்கள் திறமையை வீணடிக்க செய்து விட்டார்கள். டெஸ்ட் அணியைப் பொறுத்த வரை பந்து வீச்சாளர்கள் திறமையாகச் செயல்பட்டால் தான் அந்த அணி வெற்றி பெற முடியும். ஐ.பி.எல். போட்டியில் பந்து வீச்சாளர்கள் அதிகமாக ஆடி பலவீனமான முறை யில் இருந்தனர். எனவே தான் அவர்களால் விக்கெட் எடுக்க முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

# சிமெந்து தரப்பரிசோதனை அறிக்கை அடுத்தமாதம் வெளியிடப்படும்



(கொழும்பு)

உள்நாட்டுச் சந்தையில் உள்ள சிமெந்தின் மாதிரிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தரப்பரிசோதனையின் அறிக்கையை அடுத்த மாதமளவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக நுகர்வோர் சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்தையில் விற்பனை செய்யப்படும் சிமெந்துகளின் தரத்தை பரிசோதனை செய்வதற்காக அவற்றின் மாதிரிகள் வெளிநாடு ஒன்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் ரூமி மருசூக் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் சந்தையிலிருந்து பெறப்பட்ட சிமெந்து மாதிரிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள நாடு மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனம் தொடர்பில் தகவல்கள் வெளியிட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிமெந்து மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்ட நிறுவனம் பரிசோதனைகளுக்காக 28 நாள் கால அவகாசம் கோரியுள்ளது.இதன் பிரகாரம் அடுத்த மாதம் முற்பகுதியில் சிமெந்தின் தரம் தொடர்பான அறிக்கை தமக்கு கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

# புதையல் தோண்டியவர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

மின்னேரியா கிரித்தலே பகுதி வீடொன்றுக்கு அருகில் புதையல் அகழ்வில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.ஹிங்குரக்கொட பிரதேச சபைக்குச் சொந்தமான பெக்கோ இயந்திரத்தை பயன்படுத்தி இவர் நிலத்தை தோண்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது பிரதேச மக்கள் சந்தேகநபரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

எவ்வாறாயினும் மீன் தொட்டியொன்றை அமைப்பதற்காகவே நிலத்தைத் தோண்டியதாக சந்தேகநபர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். இந்த நிலையில் சந்தேகநபர் புதையல் அகழ்வதற்கு முயற்சித்தாரா என்பதை உறுதிப்படுத்துவதற்காக பொலிஸார் தொல்பொருள் திணைக்களத்தின் ஒத்துழைப்பை நாடியுள்ளனர்.

இது தொடர்பாக ஹிங்குரக்கொட பிரதேச சபையின் தலைவரிடம் வினவியபோது, குறித்த நபர் பிரதேச சபைக்குச் சொந்தமான பெக்கோ இயந்திரத்தை வாடகைக்குப் பெற்றுக் கொண்டதாகக் கூறினார்.

## சிறுவர் தின நிகழ்வில் 100 சிறுவர்கள் பங்கேற்பர்

(கொழும்பு)

ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி கடைப்பிடிக்கப்படும் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தேசிய மட்டத்திலான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முக்கிய நிகழ்வு அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஷிராந்தி ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இடம்பெறவுள்ளது.இந்த நிகழ்வில் நாடளாவிய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 100 சிறார்கள் விசேடமாக கலந்து கொள்ளவுள்ளனர்.

## நீர் மின் உற்பத்தி அதிகரிப்பு

(கொழும்பு)

நீர் மின் உற்பத்தி 35 வீதத்தால் அதிகரித்துள்ளதென மின் சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.கடந்த சில மாதங்களாக நிலவிய வறட்சி காரணமாக நீர் மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைவடைந்திருந்தது.

இதன் காரணமாக மின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்தது. தற்போது நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்துவருகின்றது. தொடர்ந்தும் மழை பெய்யுமானால் நீர் மின் உற்பத்தி மேலும் அதிகரிக்கும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கக்கூடாது

## விக்கிலீக்ஸ் செய்திக்கு கொழும்பு பேராயர் இல்லம் மறுப்பு

(கொழும்பு)

**இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு அமரிக்கா அழுத்தம் கொடுக்ககூடாது என்று பேராயர் கார்டினல் மல்கம் ரஞ்சித் பரிந்துரைத்ததாக கூறப்படுவதை பேராயர் இல்லம் நிராகரித்துள்ளது.**

பேராயர் மல்கம் ரஞ்சித் அமெரிக்க தூதுவர் பெற்றிசியா பியூட்டினியஸை சந்தித்தபோது இலங்கையின் இந்த நிலைப்பாட்டுக்கு ஆதரவாக கருத்துரைத்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டிருந்தது.

2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் 2 ஆம் திகதியன்று பியூட்டினஸை சந்தித்த மல்கம் ரஞ்சித், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உண்மையில் நல்ல மனிதர். இந்த நிலையில் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடரபில் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவது கடினமான காரியம்.

அவ்வாறு செய்தால் இலங்கையின் ஜனநாயகத்துக்கு பாதிப்பு ஏற்படும் அத்துடன் இராணுவ புரட்சி ஒன்று ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன் போர்க்குற்ற விசாரணைக்கான சர்வதேச அழுத்தம் காரணமாக மகிந்த ராஜபக்ஷவுக்கும் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்று கார்டினல் கூறியதாக பியூட்டினியஸ் கேபிள் மூலம் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

இதனை நிராகரித்துள்ள பேராயரின் பேச்சாளர் வணக்கத்துக்குரிய தந்தை பெனடிக்ட் ரோஜப், பேராயரின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் இந்த செய்தியை விக்கிலீகஸ் வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை கொண்டுள்ளார்.



இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தை பௌத்தர்கள் முன்பே உரிய முறையில் கையாண்டிருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்திருந்த கருத்துக்காக பௌத்தர்களிடம் இருந்து அவருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் ஆயரின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்

# ஜே.வி.பி.இன் பிரச்சினை குறித்து புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்பு

ஜே.வி.பி பிரச்சினை குறித்து தேசிய புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்பு நடத்திவருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜே.வி.பி கட்சி ஸ்தாபிக்கப்பட்டது முதல் விடுவிக்கப்படாத சில புதிர்களுக்கு விடைதேடும் நோக்கில் தேசியப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரையில் கட்சியினால் வெளிக்காட்டப்படாத பல ஜே.வி.பி தலைவர்கள் தற்போது கட்சித் தலைமையகத்துடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர்.

மாறுவேடமிட்ட தேசியப் புலனாய்வுப் பிரிவினர் கட்சித் தலைமையகம் அமைந்துள்ள பெலவத்தை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடமையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கண்காணிப்பதன் மூலம் ஜே.வி.பி.யின் இரகசிய நடவடிக்கைகளை அம்பலப்படுத்த முடியும் என தேசிய புலனாய்வுப் பிரிவினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

# தமிழக அகதிமுகாம்களிலிருந்து 40பேர் நாடு திரும்பவுள்ளனர்

(கொழும்பு)

தமிழக அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கையர்களில் 40 பேர் அடுத்தமாதம் கப்பல் மூலம் இலங்கைக்கு அழைத்துவரப்படவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சின் தேசிய திட்ட ஒருங்கிணைப்பாளர் ராசிக் தெரிவித்துள்ளார்.

முதலாவது தொகுதியினர் எதிர்வரும் ஒக்டோபர் 12ஆம் திகதி தூத்துக்குடி கொழும்புக் கப்பல் சேவை மூலம் நாடு திரும்பவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டில் மாத்திரம் இந்தியாவின் தமிழக முகாம்களிலிருந்து ஆயிரத்து 748 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். இவர்கள் விமானங்கள் மூலம் இலங்கை வந்தடைந்தனர்.

இனிமேல் இவர்களை கப்பலில் அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், இதன் பின்னர் இலங்கை வருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். 2007ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ள இலங்கையர்களில் இதுவரை 7 ஆயிரத்து 619 பேர் நாடு திரும்பியுள்ளனர். இவ்வாறு நாடு திரும்புபவர்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நாடு திரும்புபவர்களுக்கான பிரயாணப் பத்திரம் மற்றும் பயணச்சீட்டு என்பன யூ.என்.எச்.சி.ஆர். அமைப்பால் வழங்கப்பட்டு வருகின்றது.

நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதுடன், அதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் மீள்குடியேற்றத்திற்கான நிவாரணமும் வழங்கப்படுகிறது. சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கான தற்காலிக கூடாரங்கள் உள்ளிட்ட உதவிகள் மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்படுகின்றன என்றார்.

# போரில் இரசாயன ஆயுதங்களை படையினர் பயன்படுத்தவில்லை

## என்கிறது திவயின பத்திரிகை

(கொழும்பு)

போரின்போது அரசாங்கப் படையினர் வன்னி மக்கள் மீது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

படையினர் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை என்பதனை இந்திய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த சில புலி ஆதரவாளர்கள் படையினர் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் வன்னியைச் சேர்ந்த அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர். வன்னியில் காயமடைந்தவர்களுக்கு இந்திய மருத்துவர்கள் சிகிச்சை அளித்துள்ளதாகவும், இதன்போது இரசாயன ஆயுதத் தாக்குதலுக்கு இலக்கான எவரும் சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விக்கிலீக்ஸ் தகவலின் அடிப்படையில் இந்த செய்தியை வெளியிடுவதாக திவயின பத்திரிகை மேலும் அறிவித்துள்ளது.

## கடல்சார் கேந்திர நிலையமாக கொழும்புத் துறைமுகம் அபிவிருத்தி

(கொழும்பு)

இலங்கையை ஆசியாவின் கடல்சார் கேந்திர நிலையமாக மாற்றியமைக்கும் திட்டத்தின் கீழ் கொழும்புத் துறைமுகம் மேலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

அதன் ஒரு கட்டமாக கொழும்புத் தெற்குத் துறைமுகத்தில் புதிய கொள்கலன் இறங்குதுறை ஒன்று நிறுவப்படவுள்ளது. இதற்கான முதலீட்டை வழங்க சர்வதேச தனியார் நிறுவனம் ஒன்று முன் வந்துள்ளது. 5 கோடி ரூபா நிதி முதலீடு திட்டத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த இறங்குதுறை நவீன வசதிகளுடனான இறங்குதுறையாக அபிவிருத்தி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கப்பல்களில் இருந்து பொருட்களைத் தாமதம் இன்றி கையாள்வதற்கும் இந்த இறங்கு துறையில் வசதிகள் இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


10. a. நடுப்புள்ளித் தேற்றத்தின் மறுதலைத் தேற்றத்தைக் கூறுக.

1. உருவில் AB, AC இன் நடுப்புள்ளிகள் முறையே P,Q ஆகும். BC=CD வரை நீட்டப்படுமாறு AC ஆனது E ஆரை நீட்டப்படுவது CS=ES ஆகும். உருவை வரைந்து தரவுகளைக் குறிக்க.

2. PQ // BC என நிறுவுக.

3. CD // SR எனின் DR=ER என நிறுவுக.

4. PQRS ஓர் இணைகரமாகும்.




11. ஒரு குறித்த நாளில் வைத்தியசாலைக்கு கண்பார்வை தொடர்பாக வந்தவர்கள் பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வயது (வருடம்) | 6 – 14 | 15 – 23 | 24 – 32 | 33 – 41 | 42 – 50 | 51 – 59 | 60 – 68 |
|---|---|---|---|---|---|---|---|
| நோயாளியின் எண்ணிக்கை (*f*) | 5 | 12 | 15 | 20 | 18 | 15 | 5 |

1. சிகிச்சை பெற்றவர்களில் அதிக எண்ணிக்கையானோர் எந்த வயதுக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்?

2. சிகிச்சை பெற்ற 50 வயது அல்லது 50 வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை சிகிச்சைபெற வந்தவர்களின் மொத்த எண்ணிக்கையின் என்ன சதவீதம்?

3. (33-41) வகுப்பின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகப் பயன்படுத்தி சிகிச்சைபெற வந்தவர்களின் இடை வயதைக் காண்க. (முழு எண்ணில் தருக)


12. DB என்பது கிடைத்தளம் ஆகும். DC என்பது 20 m உயரமான கட்டடத்தில் C என்ற யன்னல் உண்டு. அதற்கு எதிரே BA என்ற மாடிக்கட்டடம் உண்டு.

I. உருவைப் பிரதி செய்து C இல் இருந்து பார்க்கும்போது மாடிக்கட்டட உச்சி A இன் ஏற்றக்கோணம் $45^0$ உம், அதன் அடி B இன் இறக்கக் கோணம் $35^0$ உம் எனக் குறிக்க.

II. DB இன் தூரம் என்ன?

III. AB இன் உயரம் என்ன?

IV. D இலிருந்து உச்சி A ஏற்றக்கோணம் (θ)யாது?









# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 3 மணி

# கல்வி முரசு

## கணிதம் - பகுதி II




**யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

## பகுதி - A

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடைதருக**

01. ஒரு செய்தித்தாளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

> வங்கி ஒன்றில் காணி கொள்வனவு செய்வதற்கு கடன்பெறலாம். ஆண்டுக்கு எளிய வட்டி 12 வீதம் ஆகும்.

> தனியார் வங்கி ஒன்றில் 150,000 ரூபா கடன் பெற்றால் 3 ஆண்டுகள் முடிவில் வட்டியாக ரூபா 49500 கொடுக்கலாம்.

மேற்குறிப்பிட்ட தகவல்களுக்கு ஏற்ப வங்கியில்

அ. 100 ரூபா கடனுக்கு ஓர் ஆண்டு வட்டி யாது?

ஆ. எக்கடன் முதலுக்கு ஓர் ஆண்டு முடிவில் வட்டியாக 2400 ரூபா கொடுக்க வேண்டும்.

இ. 150,000 ரூபா கடன்பெற்றவர் ஒருவர் 3 ஆண்டுகள் முடிவில் கொடுக்க வேண்டிய வட்டி யாது?

ஈ. தனியார் வங்கியில் அறவிடப்பட்ட வருட வட்டி வீதம் யாது?

02. I. A என்ற அப்பிள் வியாபாரி 3 தட்டுகளில் 3 தரங்களில் அப்பிள் விற்பனைசெய்கின்றார்.

| | பெரிது | நடுத்தரம் | சிறிது |
|---|---|---|---|
| முதலாவது தட்டில் | 6 | 4x | 12 |
| இரண்டாவது தட்டில் | 2 | 6 | 4 |
| மூன்றாவது தட்டில் | 2x | 4 | 8 |

அ. இதனைத் தாயமாகத் தருக. வரிசையில் தருக.

II. B என்ற வியாபாரி

| | முதலாவது தட்டில் | இரண்டாவது தட்டில் | மூன்றாவது தட்டில் |
|---|---|---|---|
| பெரிது | 8 | 7 | y |
| நடுத்தரம் | y | 4 | 6 |
| சிறிது | 5 | 8 | 5 |

ஆ. இதனைத் தாயமாகத் தருக. வரிசையில் தருக.

இ. $A+B=\begin{pmatrix}14 & 20 & 17\\ 9 & 10 & 12\\ 12 & 12 & 13\end{pmatrix}$ எனின் x,y இன் பெறுமானத்தைத் தருக.

ஈ. பெரிய அப்பிள் ஒன்று 40 ரூபா. நடுத்தர அப்பிள் ஒன்று 30 ரூபாவும் சிறிய அப்பிள் ஒன்று 25 ரூபா எனில் இரு வியாபாரிகளும் பெரிய அப்பிள் முழுவதும் விற்றால் ஒவ்வொருவரும் பெறும் பணத்தொகையை தனித்தனியாகக் காண்க.

03. $y=x^2-4x$ இன் வரைபை வரைவதற்கு x,y ஆகியவற்றின் பெறுமானங்களின் வெற்றிடப் பகுதியை நிரப்புக.

| $x$ | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | 5 | 0 | -3 | --------- | -3 | 0 | 5 |

அ. x=2 ஆகும் போது y இன் பெறுமானம் காண்க.

ஆ. வரைபுத்தாளில் x-அச்சு, y- அச்சு வழியே பத்து சிறிய சதுரங்களை ஒரு அலகாகக் கொண்டு சார்பின் வரைபை வரைக.


இ. வரைபின் சமச்சீர் சமன்பாடு யாது?

ஈ. $y=x^2-4x$ இன் இழிவுப் பெறுமானம் யாது?

உ. $y=x-3$ என்ற நேர்கோட்டை அதே வரைபுத் தாளில் வரைக.

ஊ. $y=x^2-4x$ உம் $y=x-3$ உம் ஆகியன வெட்டும் x இன் ஆள்கூறு சமன்பாடு $x^2-5x+3=0$ திரும்பதி ஆக்குமெனக காட்டுக.

04. a. புகைவண்டி நிலையத்தில் இருந்த பயணிகளில் 48 பேரிடம் கைத்தொலைபேசி இருந்தது. 43 பேர் பெண்களாவர். தொலைபேசி வைத்திராத பெண்களின் எண்ணிக்கை 27 ஆகும். தொலைபேசி வைத்திராத ஆண்களின் எண்ணிக்கை 35 ஆகும். இத்தரவுகளை தரப்பட்ட வெண் உருவில் குறித்துக் காட்டுக.




அ. தொலைபேசி வைத்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை யாது?

ஆ. தொலைபேசி இல்லாத ஆண்களின் பகுதியை வென் உருவில் நிழற்றிக் காட்டுக.

இ. புகைவண்டி நிலையத்தில் இருந்த பயணிகளின் எண்ணிக்கை யாது?

b. அ. வானூர்தி ஒன்றினால் எதிரிகள் முகாமுக்கு குண்டுகள் போடப்பட்டன. குண்டுகள் எதிரி முகாமுக்கு சரியாக விழுவதற்கான நிகழ்தகவு 4/5 ஆகும். அடுத்தடுத்த இரு குண்டுகள் போடப்பட்டன. எதிரிகள் முகாமுக்கு விழுவதற்கான அல்லது விழாதிருப்பதற்கான நிகழ்ச்சியைக் காட்டும் மரவரிப்படம் ஒன்று தருக.

1. இரு குண்டுகளும் எதிரிகள் முகாமுக்கு விழுவதற்கான நிகழ்தகவு யாது?
2. ஒரு குண்டு மட்டும் எதிரிகள் முகாமுக்கு விழுவதற்கான நிகழ்தகவு யாது?
3. குறைந்தபட்சம் ஒரு குண்டேனும் எதிரி முகாமுக்கு விழுவதற்கான நிகழ்தகவு யாது?

05. அ. அடியின் ஆரை 2r ஆகவும் உயரம் h கொண்ட உருளை வடிவத் திண்மத்தின் கனவளவு π r,h இல் தருக.

ஆ. உருளை வடிவப் பகுதியில் ஆரை r ஆகவுள்ள அரைக்கோணப் பகுதி சமச்சீராக வெட்டி எடுத்தால் அதன் கனவளவு π r இல் தருக.

இ. ஆரை 2r ஆகவும் உயரம் a ஆகவும் கொண்ட கூம்பின் பகுதி சமச்சீராக வெட்டி எடுத்தால் அதன் கனவளவு π,r,a இல் தருக.

ஈ. a=4r ஆகவும் h=6r ஆகவும் இருப்பின் எஞ்சிய உருளைப் பகுதியின் கனவளவு $18\pi r^3$ எனக் காட்டுக.

உ. π=3.14,r=0.7 என்ற மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தி எஞ்சிய உருளைத் திண்மத்தின் கனவளவு யாது?

[உரு கனஅளவு $\pi r^2 k \longrightarrow$ கூம்பின் கனஅளவு $\frac{1}{3}\pi r^2 h \longrightarrow$ கோளகனஅளவு $\frac{4}{3}\pi r^3$]

06. அடுத்துவரும் மூன்று நேர்நிறை எண்களில் முதலாம், இரண்டாம் எண்களின் பெருக்கத்துடன் இரண்டாம் மூன்றாம் எண்களின் பெருக்கத்தைக் கூட்ட 162 கிடைக்கும்.

அ. முதலாவது எண் a எனில் அடுத்த இரு எண்களையும் a இன் சார்பில் தருக.

ஆ. முதலாம், இரண்டாம் எண்களின் பெருக்கத்தை கோவைகளில் தருக.

இ. இரண்டாம், மூன்றாம் எண்களின் பெருக்கத்தை கோணச்சார்பில் தருக.


ஈ. இருபடிச் சமன்பாடு ஒன்று தந்து அதன் மூலம் $a^2+2a-80=0$ எனக்காட்டுக.

உ. இருபடிச் சமன்பாடு தீர்ப்பதன் மூலம் அந்த மூன்று நிறை எண்களைக் காண்க.



## பகுதி - B

07. I. நீளமான கம்பியில் இருந்து வெட்டப்பட்ட ஒரு சென்றிமீற்றர் நீளமான சர்வசமக் கம்பித்துண்டு ஒட்டிப் பொருத்தப்பட்டு மேல்மாடிக் கிரில்கள் செய்யப்படுகின்றது.




அ. முதலாவது வடிவத்துக்கு இரண்டாவது வடிவத்தைவிட எந்தனை கம்பித்துண்டுகள் குறைவாக வேண்டும்.

ஆ. முதல், இரண்டாம், மூன்றாம் வடிவத்துக்குத் தேவையான கம்பித்துண்டுகள் தனித்தனியே காண்க.

இ. 12ஆவது வடிவம் அமைக்க எத்தனை கம்பித்துண்டுகள் தேவை?

ஈ. 12 வடிவமும் அமைக்க 3.6 m நீளமான நேரிய கம்பி போதுமானது என ஒரு மாணவன் கூறினார். இக் கூற்று உண்மையானதா? காரணம் தருக?

II. ஒரு பெருக்கல் விருத்தி $T_n = 5X2^{n-1}$ இல் $T_n = 160$ n இன் பெறுமானம் யாது?

08. cm, mm அளவிடையும், நேர்விளிம்பும், கவராயம் மட்டும் பயன்படுத்தி அமைப்புக் கோடுகள் தெளிவாகக் காட்டி வரைக.

I. PQ=6cm, QR=7.2cm கோணம் $PQR=120^0$ ஆகுமாறு முக்கோணி PQR ஐ அமைக்க. அடிக்கோடு QR ஐ வரைக.

II. பக்கம் QR ஐ Qவில் செங்குத்து வரைக.


III. PQ இன் செங்குத்து இருசம கூறாக்கி வரைக.

IV. இரு நேர் வரைகளும் சந்திக்கும் புள்ளி O எனக் குறித்து OQ ஐ ஆரையாகக் கொண்டு வட்டம் வரைக. ஆரையை அறிந்து எழுதுக.

V. நீங்கள் வரைந்த வட்டத்துக்கு QR க்கு உள்ள தொடர்பு.

09. அ. ஒரு வட்ட நாற்பக்கல் எதிர்க்கோணச் சோடி பற்றிய தொடர்பைக் காட்டும் தேற்றத்தை எழுதுக.

ஆ. உருவில் AB ஓர் விட்டம், AC ஓர் நாண். கோணம் CAB இன் இருசம கூறாக்கி AP ஆகும். AP=DP ஆக இருச் ... ,னது D வரை நீட்டப்பட்டுள்ளது. பின்வருவனவற்றை நிறுவுக.




I. கோணம் CPB=180-2x

II. கோணம் APD=180-2x

III. கோணம் $CPD=90^0$


IV. $\Delta APB = \Delta DPC$

# 90 வயது வயோதிபரின் சுகபோக வாழ்க்கை!!

தென் அமெரிக்க நாடான பிரேசிலின் ரியோ கிராண்ட் நார்ட் பகுதியை சேர்ந்தவர் லூயிஸ் கோஸ்டா ஒலிவரா (90). விவசாயப் பண்ணையில் வேலை பார்த்து வந்தவர். வயதாகிவிட்டதால் தற்போது ஓய்வில் இருக்கிறார். இவருக்கு 2 மனைவிகள், 50 பிள்ளைகள், 100 இற்கும் அதிகமான பேரக் குழந்தைகள் இருக்கின்றனர்.

இவரது முதல் மனைவி பெயர் பிரான்சிஸ்கா. அவருக்கு 17 குழந்தைகள் பிறந்தன. உடல் நலம் பாதிக்கப்பட்டு பிரான்சிஸ்கா இறந்த பிறகு, மரியா சில்வா என்பவரை ஒலிவரா 2 ஆவது திருமணம் செய்தார். அவர் மூலமாக 17 குழந்தைகள்.

இதற்கு நடுவே, அக்காவுக்கு ஒத்தாசையாக இருப்பதற்காக மரியாவின் தங்கை ஒசலிட்டா அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு வந்துபோனார். குழந்தைகளை குளிப்பாட்டுவது, பத்துப் பாத்திரம் தேய்ப்பது, துணி துவைப்பது போன்ற உதவிகளை செய்து வந்தார். மச்சினி செய்யும் பணிவிடைகள் ஒலிவராவுக்கு ரொம்பப் பிடித்துப்போனது. அவரையும் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டார். அவர் மூலம் 15 குழந்தைகள்.



2 மகளும் வாழ்க்கை நடத்துவதைப் பார்க்க, அவர்களது அம்மா வந்தார். அவரையும் ஒலிவரா விடவில்லை. அவர் மூலமாகவும் ஒரு குழந்தை பிறந்துவிட்டது. 17+17+15+1 என்று மொத்தம் 50 குழந்தைகள். கூட்டம் அதிகமானதால் இரண்டு வீட்டில் ஜாம்ஜாம் என்று குடித்தனம் நடத்தி வருகிறார் ஒலிவரா. பெண்கள் பற்றிய பேச்சு எடுத்தாலே புல்லரிக்கிறார். கடவுள் படைப்பிலேயே மிகமிக சூப்பரானது பெண்கள்தான். விவசாயம், வேலை என்று நான் கழித்த நாட்கள் வீண் என்று இப்போது புரிகிறது. இவர்கள் 4 பேர் தவிர மேலும் பலருடன் ஜாலியாக இருந்திருக்கிறேன்.

அனேகமாக என் குழந்தைகள் இந்த ஏரியாவில் மேலும் பலர் இருக்கவும் வாய்ப்பு இருக்கிறது. பிள்ளைகள் பலரது பெயர்கூட எனக்கு ஞாபகம் இல்லை. கடந்த 40 ஆண்டுகளாக தம் அடிப்பதில்லை. மது குடிக்கவில்லை. தலைவலி, முதுகுவலி என எந்த வலியும் இல்லாமல் நன்கு ஆரோக்கியமாக இருக்கிறேன். மனைவிகள்தான் என் சந்தோஷத்துக்குக் காரணம் என்கிறார் கில்லாடி தாத்தா ஒலிவரா.

# நீளமான திருமண ஆடை





திருமணத்திற்கு 3km நீளமான ஆடையுடன் ஊர் முழுவதும் வலம் வந்த இந்த ஜோடி கின்னஸ் சாதனைப்புத்தகத்திலும் இடம்பெற்றிருக்கிறது. தேவாலயத்தில் இருந்து திருமண மண்டபம் வரை இவர்கள் வீதிவழியே ஊர்வலமாகச் சென்றனர். இதில் மணப்பெண்ணின் நண்பிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர், 6000m நீளமான பட்டுத் துணியில் தயாரிக்கப்பட்ட இந்த ஆடை முந்தைய சாதனையை விட 28 மடங்கு நீளமானது.

# மிகச் சிறிய கமெரா



உலகின் முதலாவது மிகச் சிறிய விற்பனைக்கான புகைப்படக்கருவியினை அமெரிக்க நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது. வெறும் 26 மில்லி மீற்றர் அளவான இக்கருவியின் மூலம் 2 மெகா பிக்ஸல் வரையான புகைப்படத்தினை எடுக்க முடியும். மேலும் இதன் மூலம் வீடியோப் பதிவும் மேற்கொள்ள முடியும். இதன் நிறை 26 கிராம்களே ஆகும். இதனை அமெரிக்காவைச் சேர்ந்த ஹமாசர் ஸ்கிலிமெர் என்ற நிறுவனம் உருவாக் கியுள்ளது. இதன் விலை 99.95 அமெரிக்க டொலர்களாகும்.

உருவத்தில் சிறிதெனினும் செயற்பாட்டில் இக்கருவி பெரிய புகைப் படக்கருவிகளுக்கு சமமானதெனவும், சந் தைக்கு வரும் போது பெரும் வரவேற்பைப் பெறுமெனவும் இதனை உருவாக்கியுள்ள நிறுவனம் தெரிவித்துள்ளது. இதேநேரம் கடந்த மே மாதம் இஸ்ரேலைச் சேர்ந்த மெடிகஸ் நிறுவனம் 0.99 மில்லி மீற்றர் அளவிலான புகைப்படக்கருவி ஒன்றை அறிமுகப்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# உலகின் குள்ளமான பூனை

பூனை ஒன்று உலகத்தின் குள்ளமான (Shortest cat) பூனை என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளது. வழமையான பூனையின் கால்கள் 10 இஞ்சி நீளமானதாக இருக்கும். ஆனால் இதன் கால்களின் நீளம் 6 இஞ்சி மட்டுமே. இந்தப் பூனைக்கு 2 வயது தான் ஆகின்றது. கின்னஸ் உலகசாதனைப் புத்தகத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் உரிமையாளரான Tiffani Kjeldergaard கையில், கின்னஸ் உலக சாதனைப் படம் தான் உலகின் குள்ளமான பூனை




பூனையின் பெண் கருத்துத் தெரிவிக் பதிவாளர்கள் உங்களி இருப்பதாக முதலில் தெரிவித்தபோது உண்மை யிலேயே வியந்து விட்டேன். கால் நடை மருத்துவரிடம் காட்டி அதன் உயரம் ஏனைய பூனைகளின் உயரத்தை விடக் குறைவு தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன். பூனை குள்ளமாக இருந்தாலும் மரங்களில் ஏறுவதிலும் பாய்வதிலும் ஏனைய பூனைகளுக்கு கொஞ்சமும் சளைத்தது அல்ல...

# இறந்தவர் உடலைத் திரவமாக்க

ஆண்டாண்டு காலமாக இறந்தவர் உடலை ஊர் முழுவதும் எடுத்துச்சென்று இடுகாட்டில் அடக்கம் செய்வோம் அல்லது சுடுகாட்டில் எரிப்போம். காலங்கள் மாறி தற்போது பரவலாக மின்ன டுப்பு மூலம் உடலை எரித்து விடுகிறோம். இப்போது அதேபோன்று அமைப்பை உடைய ஆனால் தொழில்நுட்பத்தில் வேறுபட்ட முறையொன்று உருவாகியிருக்கிறது.

அதுதான் body liquefaction எனப்படும் உடலை நீர்மமாக்குதல். சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்காத இந்த முறையானது மிகவும் எளிதானது. Glasgow-based cqmpany மூலம் நடைமுறைக்கு வரும் இந்தப் பொறி 180C வெப்பத்தில் உடல் மூன்று மணி நேரத்திற்குள் தகனம் செய்யப்படும், பின்னர்



நீரினால் நிரப்பப்பட்டு நீர் வெளியேற்றி மூலம் செறிவான திரவமாக மாற்றப்படும்.

பச்சை நிறமான இத் திரவத்தை பூங்கா போன்ற இடங்களில் உரமாகவும் பயன்படுத்தலாம், இதன் ஆரம்ப கட்டமாக சில இறந்த உடல்களை வைத்துப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## உங்களது கணினியை பாதுகாப்பதற்கு

நம்மில் பலரும் விண்டோஸ் இயங்கு தளம் கணினி தான் அதிகமாகப் பயன்படுத்துகிறோம். ஆனால் நம்மில் பலருக்கு ஆப்பிள் கணினி மீது அதிக ஆர்வம் இருக்கும் அதை எப்படியாவது பயன்படுத்த வேண்டும் என்ற ஆசையும் இருக்கும். அதில் உள்ள கிராபிக்ஸ் மற்றும் அதன் அனிமேஷன் இதற்கு முக்கியமான காரணமாக இருக்கலாம். இந்தப் பதிவில் நாம் எப்படி ஒரு விண்டோஸ் கணினியை ஆப்பிள் ஆக மாற்றுவது என்பது பற்றிப் பார்ப்போம்.

நாம் விண்டோசின் இயல்பான தோற்றத்தை மிகவும் எளிதாக அப்பிளைப் போல மாற்றலாம். இதற்கு நாம்ஒரு மென்பொருளை நிறுவவேண்டும் பின்னர் கணினியை மறுத்தொடக்கம் செய்ய வேண்டும் அவ்வளவு தான்.

இந்த மென்பொருள் நம் கணினியை அப்படியே ஆப்பிள் கணினிபோல தோற்றத்தில் மாற்றுகிறது மற்றும் MAC இல் உள்ள அனிமேஷனோடு வருகிறது.

இதனை நீங்கள் சாதாரணமாக மற்ற மென்பொருள்கள் நிறுவுவது போல நிறுவுங்கள். பின்னர் உங்கள் கணினியைப் பாருங்கள். இதில் வகையான தீம் இருக்கிறது. அதில் நீங்கள் உங்கள் விருப்பத்தைப் போல் தேர்வு செய்யுங்கள்.

மேலதிக விளக்கத்திற்கு இந்த வீடியோவைப் பார்க்கவும்.

http://www.mediafire.com/?4wxx2lj1q2pwpdp


http://www.mediafire.com/?bn46kb484odofya

கணினி மூலை




# உள்நாட்டு விவகாரங்களில் அந்நியத் தலையீடு இருக்கக்கூடாது

## ஐ.நா கூட்டத்தில் மன்மோகன்சிங்



(சென்னை)

உள்நாட்டு விவகாரங்களில் அந்நியத் தலையீடு எதுவும் இருக்கக்கூடாது என ஐ.நா சபையில் மன்மோகன்சிங் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 66 ஆவது ஆண்டுப் பொதுச்சபைக்கூட்டத்தில் உலக நாடுகளின் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி மன்மோகன் சிங் பேசினார்.

சட்டப்படியான ஆட்சி என்பது நாடுகளுக்கு உள்ளே மட்டும் அல்ல சர்வதேச அரங்கிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். தங்களுடைய எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் தங்களுக்கு எப்படிப்பட்ட அரசு வேண்டும் என்பதை அந்தந்த நாடுகளின் மக்களே தீர்மானிககுமாறு விட்டுவிட வேண்டும்.

வெளியிலிருந்து இராணுவத் தாக்குதல் மூலம் ஒரு நாட்டைக் கைப்பற்றி அங்கே புதிய ஆட்சியை நிறுவும் போக்கு கூடவே கூடாது ஒரு நாட்டில் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தால் அங்கு சுமூகமான ஆட்சி மாற்றம் ஏற்படவும் ஜனநாயக அமைப்புகள் வலுப்படவும் உதவ வேண்டிய கடமை சர்வதேச சமூகத்துக்கு இருக்கிறது.

ஆனால் ஒரு நாட்டின் பிரச்னைக்குத் தீர்வு என்ன என்று வெளியிலிருந்து பரிந்துரைப்பதும் அதை அமுல்படுத்த ராணுவ ரீதியாகத் தலையிடுவதும் மிகவும் ஆபத்தானது.

ஒரு நாட்டின் ஒற்றுமை பிரதேச ஒருமைப்பாடு இறையாண்மை சுதந்திரத் தன்மையையும் மதிக்கும் வகையிலும் காப்பாற்றும் வகையிலும் தான் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகள் அமைய வேண்டும். வளர்ச்சிக்கு உற்ற சூழலை மக்கள் உருவாக்க உதவ வேண்டிய கடமை ஒவ்வொரு அரசுக்கும் இருக்கிறது. இதுதான் ஜனநாயகத்தின் அடிநாதமாகவும் அடிப்படை மனித சுதந்திரத்தின் சாரமாகவும் இருக்கிறது.

உலக நாடுகளின் பிரச்னைகளைத் தீர்க்க நம்மிடையே ஒத்துழைப்பு அவசியம். முரண்பட்ட மோதலில் இறங்கினால் பிரச்னைகளுக்குத் தீர்வு காண இயலாது. நம்மிடையே புதிய உறுப்பினராகப் பங்கேற்கும் தெற்கு சூடானுக்கு இந்தியாவின் சார்பில் வரவேற்பைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

# நடிகைகளைத் திருமணம் செய்துகொள்ள மாட்டேன்

## நடிகர் நந்தா



நடிகைகளை திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று நடிகர் நந்தா தெரிவித்துள்ளார். வேலூர் மாவட்டம் என்ற படத்தில் தற்போது நடித்துக் கொண்டிருக்கிறார் நடிகர் நந்தா. இந்தப் படம் குறித்த பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட அவரிடம், நடிகைகளை திருமணம் செய்வீர்களா என்று கேட்கப்பட்டது.

அதற்கு அவர், நிச்சயமாக நான் நடிகைகளைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன். கணவன், மனைவி இருவரும் சினிமாவில் இருந்தால் சரி வராது. என் குடும்பத்தினர் பார்க்கும் பெண்ணைத் தான் நான் திருமணம் செய்து கொள்வேன். குடும்பத்தைக் கவனித்துக் கொள்பவராக மட்டும்தான் மனைவி இருக்க வேண்டும் என்றார்.

# விமான விபத்தில் பலியானோருக்கு தமிழக முதலமைச்சர் இரங்கல்

(சென்னை)

நேபாள விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் ஜெயலலிதா அனுதாபம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

நேபாளத்தில் 18 சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற விமானம் காத்மாண்டு விமான நிலையத்தை நோக்கி திரும்பிக் கொண்டிருக்கையில் மலையில் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து விமானத்தில் பயணம் செய்த 18 பேரும் உயிரிழந்தனர் என்ற செய்தி கேட்டு மிகுந்த துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

இந்த விமான விபத்தில் மரணமடைந்தவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியை அளித்துள்ளது.

விமான விபத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு ஜெயலலிதா தனது அறிக்கையில் குறிபபிட்டுள்ளார்.

# ரயில் நிறுத்தப் போராட்டத்தால் தெலுங்கானாப் பகுதி முடங்கியது



(ஐதராபாத்)

ரயில் நிறுத்தப் போராட்டத்தால் தெலுங்கானாப் பகுதியில் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியது. ஆந்திர மாநிலத்தைப் பிரித்து தனி தெலுஙகானா மாநிலம் அமைகக வேண்டும் என்று தெலுங்கானா மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இம்மாத இறுதிக்குள் தனி மாநிலம் குறித்து தெளிவான முடிவை மத்திய அரசு அறிவிககாவிட்டால் தங்களது பதவிகளை ராஜினமா செய்யப் போவதாக தெலுங்கானா பிராந்தியத்தைச் சேர்ந்த எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் அறிவித்துள்ளனர். இந்த நிலையில் தெலுங்கானா போராட்டத்தை ஒட்டி தெலுங்கானாப் பிராந்தியத்திற்கு உட்பட்ட 10 மாவட்டங்களில் ஏறகனவே அரசு பஸ் போக்குவரத்து அடியோடு நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஐதராபாத் உள்ளிட்ட இந்த 10 மாவட்டங்களிலும் 10,000 பேருந்துகள் ஓடவில்லை. இரண்டு நாள் ரயில் நிறுத்த போராட்டத்திற்கு தெலுங்கானா ஆதரவு அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

இதனால் ஆந்திர மாநிலத்தில் தெலுங்கானா பிராந்தியத்தில் அனைத்து ரயில்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

# மீனவரைக் கொலை செய்த வழக்கில் தி.மு.க. முன்னாள் அமைச்சர் கைது

(சென்னை)

தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.பி.பி.சாமி மீனவரைக் கடத்திக் கொலை செய்த வழக்கில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தி.மு.க. ஆட்சியில் மீன் வளத்துறை அமைச்சராக இருந்தவர் கே.பி.பி.சாமி சமீபத்தில் நடந்த சட்டமன்ற தேர்தலில் திருவொற்றியூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியை தழுவினார்.

கடந்த 2006 தி.மு.க. ஆட்சியில் மீன் வளத்துறை அமைச்சராக கே.பி.பி.சாமி நியமிக்கப்பட்டவுடன் கே.பி.பி.சாமி வசிக்கும் கே.வி.குப்பம் பகுதியில் கே.பி.பி.சாமியின் சகோதரர்கள் கே.பி.பி. சஙகர் மற்றும் கே.பி.பி.சொக்கலிங்கம் ஆகியோர் தலைமையில் அடாவடிக் கும்பல் புகுந்து அந்த மீனவ கிராமத்து மக்கள் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்பதற்காக கிராமத்தை விட்டே விரட்டினர். அதன்பிறகு சொந்த இடத்திற்கு திரும்ப முடியாமல் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தத்தளித்தனர்.

சாமியின் அட்டகாசத்தை எதிர்க்க முடியாத நிலை பொதுத்தேர்தலில் தங்கள் ஆத்திரத்தை காண்பித்த மக்கள் சாமியை படுதோல்வி அடையச் செய்தனர். இந்நிலையில் கே.பி.பி.சாமியும் அவரது சகோ தரர்கள் மற்றும் அடியாட்கள் தனது கணவனைக் கடத்திக் கொன்று விட்டதாக பிரேமாவதி என்ற பெண் கடந்த மாதம் பொலிஸ் அதிகாரியிடம் புகார் அளித்திருந்தார்.

இதேபோல் வேலு என்பவரின் மனைவியும் தனது கணவரை கே.பி.பி.சாமியின் தம்பிகள் கே.பி.பி.சங்கர், கே.பி.பி.சொக்கலிங்கம் மற்றும் டைடன் (எ) யோபுகுமார், சுந்தரம், டில்லிபாபு, வைத்தியலிங்கம் உள்ளிட்டோர் சாமியின் தூண்டுதலின் பேரில் சுனாமி நிதியை கே.பி.பி.சங்கர் முறைகேடாக கையகப்படுத்தியதை தட்டி கேட்டதற்காக வீட்டிலிருந்து கடத்திச் சென்று கொலை செய்ததாக புகார் அளித்திருந்தார்.

வீட்டிலிருந்த தங்கள் கணவன்மார்களை சாமியின் அடியாட்கள் 2006 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அழைத்து சென்றதாகவும் அதன் பிறகு எங்கு தேடியும் தமது கணவர்கள் கிடைக்கவில்லை என்றும் இதனிடையே தனது கணவன்மார்களை சாமியின் ஆட்கள் மற்றும் தம்பிகள் தாக்கிக் கடலில் தூக்கி வீசியதைப் பார்த்ததாக சிலபேர் சொன்னதாக குறிப்பிட்டு தனிதனியே பொலிஸில் புகார் கொடுத்தனர்.

# உலகின் மிகவும் பிரபலமானவாகள் பட்டியலில் சோனியா காந்தி

(ஐதராபாத்)

உலகின் மிகவும் பிரபலமானவர்கள் பட்டியலில் சோனியா காந்தியின் பெயர் இடம்பெற்றுள்ளது. இங்கிலாந்தின் இடதுசாரி பத்திரிகையான நியூ ஸ்டேட்ஸ் மேன். உலகின் பிரபலமானவர்களின் பட்டியலை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அதேபோல தற்போதும் ஒரு பட்டியலை வெளியிட்டு இருக்கிறது.

உலகின் மிகவும் சக்தி வாய்ந்த மற்றும் பிரபலமானவர்கள் என்று 50 பேரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதில், காஙகிரஸ் தலைவர் சோனியா காந்தியின் பெயரும் இடம்பெற்று உள்ளது. மேடம் இந்தியா என்று குறிப்பிட்டு சோனியா காந்தியை வானளாவ அந்த பத்திரிகை புகழ்ந்துள்ளது.

# ஐஸ்வர்யா ராய்க்கு இரட்டைக் குழந்தைகள்



(சென்னை)

ஐஸ்வர்யா ராய்க்கு இரட்டைக் குழந்தை தான் பிறக்கும் என்று ஜோதிடர் ஒருவர் கூறியிருந்த நிலையில், தற்போது ஐஸ்வர்யாவுக்கு இரட்டைக் குழந்தை தான் பிறக்கும் என்று மருத்துவர்கள் உறுதிபடுத்தியுள்ளதாக அவர்களது நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் உலக அழகியும், பாலிவுட்டின் முன்னணி நாயகியுமான ஐஸ்வர்யா ராய்க்கும், நடிகர் அபிஷேக் பச்சனுக்கும் கடந்த 2007 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணம் நடந்து நீண்ட நாட்களாகியும் இவர்களுக்கு குழந்தை இல்லாமல் இருந்தனர்.

இந்நிலையில் சமீபத்தில் ஐஸ்வர்யா ராய் கர்ப்பமாக உள்ளார் என்று அமிதாப் பச்சன் தெரிவித்தார். இதனிடையே ஐஸ்வர்யாவுக்கு நிச்சயம் பெண் அல்லது இரட்டை குழந்தை பிறக்கும் என்று ஜோதிடர் ஒருவர் கூறியிருந்தார்.

அவர் கூறியது, இப்போது நிஜமாகிவிடும் போல் இருக்கிறது. தற்போது ஐஸ்வர்யாவுக்கு இரட்டைக் குழந்தைகள் என்று மருத்துவர்கள் உறுதிபடுத்தியுள்ளதாக அவர்களுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. இதனால் அமிதாப் குடும்பம் படுகுஷியாகியுள்ளது.

உலகச் செய்திகள்

# புற்றுநோயை குணப்படுத்த புதிய மருந்து கண்டுபிடிப்பு

(லண்டன்)

புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 ஆண்டு காலமாக ரேடியம் கதிர்வீச்சு மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது புற்றுநோய்களை உருவாக்கும் 'செல்'களை அழிக்கிறது. இதனால் உடலில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே, கதிர்வீச்சு செலுத்தாமல் மருந்து மாத்திரைகள் மூலம் குணப்படுத்த டாக்டர்கள் தீவிர முயற்சி கொண்டனர்.

இந்த நிலையில் ஆல்பா கதிர்வீச்சு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தை லண்டனின் உள்ள ராயல் மார்ஸ்டன் மருத்துவமனை வைத்தியர்கள் புற்றுநோய் பாதித்த நோயாளிகளுக்கு வழங்கி பரிசோதனை செய்தனர். இந்த மருந்து 922 பேருக்கு வழங்கப்பட்டது.

அதை உண்டவர்கள் நோயின் தாக்கம் குறைந்து நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்தனர். மேலும் இந்த மருந்தினால் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை. எனவே, இந்த மருந்து புற்று நோய்க்கு சிறந்தது என இங்கிலாந்தின் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இந்த மருந்து கண்டுபிடித்ததன் மூலம் புற்று நோயை முற்றிலும் குணப்படுத்த மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என முன்னணி ஆராய்ச்சியாளர் வைத்தியர் கிறிஸ்பார்க்கர் தெரிவித்துள்ளார். இந்த மருந்து கண்டுபிடிப்பு ஆராய்ச்சி குறிப்புகள் ஐரோப்பிய புற்றுநோய் ஆராய்ச்சி கழகத்திடம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா விமானம் வீழ்ந்து நொருங்கியது நேபாளத்தில் 18பேர் பரிதாப மரணம்


(காத்மாண்டு)



நேபாளத்தில் சுற்றுலா சென்ற சிறிய ரக பயணிகள் விமானம் மலையில் மோதி விபத்திற்குள்ளானதில் விமானத்தில் பயணம் செய்த இந்தியர்கள் உள்பட 18 பேர் பலியாகியுள்ளனர். அந் நாட்டிற்கு சொந்தமான புத்தா விமான நிறுவனத்திற்கு சொந்தமான ,பி.எச்.ஏ-103 என்ற சிறிய ரக விமானமே நேற்றுக் காலை 7.30 மணிக்கு புறப்பட்டு. மவுன்ட் எவரெஸ்ட் சிகரப்பகுதிகளுக்கு சுற்றுலா சென்றது. சுற்றுலாவை முடித்து விட்டு தலைநகர் காத்மாண்டு விமான நிலையம் நோக்கி திரும்பிக் கொண்டிருந்தபோது விமானக்கட்டுப்பாட்டு ரடாரிலிருந்து மறைந்தது. பின்னர் நேபாளின் லலித்பூர் மாவட்டத்தில் உள்ள கோட்டாண்டா வனப்பகுதியில் மலையில் மோதி நொறுங்கி விழுந்தது.

எவரெஸ்ட் சிகரப்பகுதியில் சுற்றுலாவை முடித்துக் கொண்டு காத்மாண்டு திரும்பும் போது மோசமான வானநிலை காரணமாக இந்த விபத்து நேர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. விபத்திற்குள்ளான விமானத்தில் 10 இந்தியர்கள், 6 ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகள் இருந்துள்ளனர். இவர்கள் அனைவரும் விபத்தில் சிக்கி பலியாகியுள்ளனர். விபத்திற்குள்ளான பகுதிக்கு மீட்பு பணியை மேற்கொள்ள நேபாள உள்நாட்டு விமான போக்குவரத்துத்துறை அதிகாரிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். மேலும் நேபாள நாட்டில் திரிபுவன் சர்வதேச விமான நிலையத்தைச் சேர்ந்த மீட்புக்குழுவினரும் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# வடகொரியாவை கண்காணிக்கும் ஜப்பானின் புதிய செயற்கைக்கோள்




(டோக்கியோ)

வடகொரியாவின் ஏவுகணைகள் மற்றும் அணுஆயுதங்களைக் கண்காணிப்பதற்காக, ஜப்பான், உளவு செயற்கைக் கோள் ஒன்றை விண்ணில் ஏவியுள்ளது.

ஜப்பானின் ககோஷிமா மாகாணத்தில் உள்ள டனேகஷீமா விண்வெளி மையத்திலிருந்து, எச் - 2ஏ என்ற உளவு செயற்கைக் கோள் ஏவப்பட்டது. மொத்தம், 470 மில்லியன் டொலர் செலவில் உருவாக்கப்பட்ட இந்த செயற்கைக்கோள், நாளை மறுதினமே விண்ணில் ஏவப்படுவதாக இருந்தது. சூறாவளி தாக்குதல் இருந்ததால், மூன்று முறை ஏவும் திட்டம் தள்ளிவைக்கப்பட்டு இறுதியில் கடந்த வாரம் ஏவப்பட்டுள்ளது. வடகொரியாவின் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்கள் இருக்கும் இடங்களை இந்த செயற்கைக்கோள் கண்காணிக்கும்.

# பூமியை நோக்கி வரும் மற்றொ-ரு செயற்கை கோள்



(வொஷிங்டன்)

பூமியை நோக்கி வரும் மற்றொரு செயற்கை கோள் இன்னும் 5 வாரத்தில் விழும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 1991ஆம் ஆண்டு காற்று மண்டல ஆராய்ச்சிக்காகவும், புவியியல் ஆய்வுக்காகவும், அமெரிக்காவில் இருந்து 6 தொன் செயற்கைகோள் அனுப்பப்பட்டது. அந்த செயற்கைகோள் 14 ஆண்டு பணி முடிந்ததும் கடந்த 2005ஆம் ஆண்டு செயல் இழந்தது.

விண்வெளியில் செயலற்ற நிலையில் இருந்த அந்த செயற்கைகோள் மெல்ல மெல்ல நகர்ந்து பூமியை நெருங்கியது. 200 துண்டுகளாக உடைந்து சிதறிய அதன் 500 கிலோ பகுதி சிதறல் நேற்று முன்தினம் கனடாவில் ஓகோடோக்ஸ் என்ற இடத்தில் விழுந்தது. இது பூமியில் விழுந்த போது மிகுந்த சேதத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதிர்ஷ்ட வச மாக எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்த நிலையில் தற்போது மீண்டும் செயலிழந்த மற்றொரு செயற்கை கோள் பூமியை நோக்கி வருகிறது. அது ஜேர்மனியால் விண்ணில் அனுப்பப்பட்டது. 'ரொசாத்' என அழைக்கப்படும் இந்த செயற்கைகோள் கடந்த 1999 ஆம் ஆண்டிலேயே செயல் இழந்து விட்டது. கடந்த 12ஆண்டுகளாக இது விண்ணில் இருந்து படிப்படியாக நகர்ந்து பூமியை நோக்கி வருகிறது. 2 முதல் 4 தொன் எடையுள்ள அந்த செயற்கைகோள் பூமியை நெருங்கி விட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே அது இன்னும் 5 வாரத்தில் பூமியில் விழும் என எதிர்பார்க்கப்படுகிறது. பூமியை நெருங்கும்போது தூள் தூளாக நொறுங்கி வெப்பத்தில் எரிந்து முழுவதும் சாம்பலாகி விடும். ஆகவே பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

01. கையடக்கத் தொலைபேசி வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அறிவொளி நிறுவனத்திற்குக் கணக்காளர், விற்பனைப் பிரதிநிதி உடனடியாகத் தேவை. 18 - 35 வயதிற்கு உட்பட்ட பன்மொழிப் புலமையுள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை rubantp@yahoo.com எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். மேலதிக விபரங்களுக்கு இல.27, திருநெல்வேலிச் சந்தி, 0212220066 இற்குத் தொடர்புகொள்ளவும்.

02. நல்ல தொடர்பாற்றல் உள்ளவர்களுக்கு நாடு பூராகவும் விற்பனைப் பிரதிநிதியாகத் தொழில் புரிய ஆர்வம் இருந்தால் 0112361951 / 0771953366 / 0778526178 இற்குத் தொடர்புகொள்ளவும்.

03. brithsh college of highur studies நிறுவனத்திற்கு ஆங்கில விரிவுரையாளர் தேவை. ஆற்றல் உள்ளவர்கள் 27 ஆம் திகதி 10.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை இல.15, சிறாம்பியடி லேன், off stanly road, jaffna என்ற முகவரிக்கு நேரில் வரவும். மேலதிக விபரங்களுக்கு 0212224550 இற்கு தொடர்புகொள்ளவும்.

04. சில்லறை வியாபார நிறுவனத்திற்கு வேலையாட்கள் உடனடியாகத் தேவை. தங்குமிட வசதியுண்டு. தொடர்புக்கு 0777379408 சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

05. புடவைக் கடை ஒன்றிற்கு சேல்ஸ் (girls) தேவை. ஓரளவு வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. நேரடியாகத் தொடர்புகொள்ளவும். Tel no - 0112362111 சம்பள விபரம் மற்றும் மேலதிக விபரங்கள் நேரில் பேசித் தீர்மானித்துக்கொள்ளலாம்.

06. யாழ்ப்பாணத்தில் வெல்டிங் வேலை இரும்பு, வெள்ளை இரும்பு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. தொடர்புகளுக்கு 0777222577, 0214920886. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். திறமையும் ஆர்வமும் உள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

07. வீட்டுப் பணிப்பெண், வீட்டுத்தோட்டப் பராமரிப்பாளர் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி என்பன வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு 0775987464.

08. கொழும்பில் வைத்தியரின் வீட்டில் சமையலுக்கும் பிள்ளைப் பராமரிப்புக்கும் பணிப்பெண் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0777730224 இற்கு தொடர்புகொள்ளவும்.

09. கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள வெளிநாட்டைச் சேர்ந்த சிறிய தமிழ்க்குடும்பத்திற்குக் குழந்தை பராமரிப்பும் உட்பட வீட்டு வேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை. உணவு, தங்குமிடம், சம்பளமாக 10000 ரூபாவும் வழங்கப்படும். ஆர்வமுள்ளகள் 077625 6505, 0112361984 இற்குத் தொடர்புகொள்ளவும்.

09. கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள வெளிநாட்டைச் சேர்ந்த சிறிய தமிழ்க்குடும்பத்திற்குக் குழந்தை பராமரிப்பும் உட்பட வீட்டு வேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை. உணவு, தங்குமிடம், சம்பளமாக 10000 ரூபாவும் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் 0776256505, 0112361984 இற்குத் தொடர்புகொள்ளவும்.

10. வீட்டுப்பணிப் பெண் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0774128067 இற்கு தொடர்புகொள்ளவும். சம்பளம் மற்றும் இதர விடயங்கள் பேசித் தீர்மானிக்கலாம்.

11. தனியார் விற்பனை நிறுவனம் ஒன்றிற்குப் பெண் விற்பனையாளர் மற்றும் வரவேற்பாளர் தேவை. அனுபவமுள்ள யாழ் நகருக்கு அண்மையில் உள்ளவராகவும், இரவு 8.00 மணிவரை வேலை செய்யக்கூடியவர் மட்டும் இன்று 26.09.2011 9 மணிக்கு, 0770296557 இற்குத் தொடர்புகொள்ளவும்.

12. செல்வா எலக்ரிக்கல் நிறுவனத்திற்கு அனுபவமுள்ள பெண் கணக்குப் பதிவாளர் தேவை. ஆற்றல் உள்ளவர்கள் 26.09.2011 தொடக்கம் 29.09.2011 வரை காலை 9 - 12 மணிவரை இல 21, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி எனும் முகவரிக்கு நேரில் வரவும். மேலதிக விபரங்களுக்கு 0755776792 இற்கு தொடர்புகொள்ளவும்.

13. எலக்ரோனிக்கல் நிறுவனத்திற்கு உபகரண விற்பனையாளர், இணைய உதவியாளர் (Net) தேவை. ஆர்வமுள்ளவர்கள் 30.09.2011 காலை 9.00 மணிக்கு சுயவிபரக் கோவையுடன் பிரகாஷ் எலக்ரோனிக்ஸ், பஸ் நிலையம், பருத்தித்துறை எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

14. கைறோலிக் பிறஸ் (Hydraylic Press) வேலைகளுக்கு டை/மோல்ட் (Die/Mould) செய்யக்கூடிய அனுபவம் உள்ள ஒருவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் செல்வா ஹாட்வெயர்ஸ் 0773573000 இற்குத் தொடர்பு கொள்ளவும்.

15. Accounts Clerk தேவை. வவுனியா தனியார் வர்த்தக நிறுவனத்திற்கு A/L கணக்கியல், வர்த்தகம் கல்வி கற்றவர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சொந்தக் கையெழுத்தில் சி.ஞானசம்பந்தன், 64, பசார் வீதி, வவுனியா. 0777354470 இற்கு தொடர்புகொள்ளவும். தங்குமிட வசதி தேவை ஏற்படின் செய்து கொடுக்கப்படும்.

# பாரிய நட்டத்தில் இயங்கும் 24 அரசாங்க நிறுவனங்கள்

## பொது நிறுவனங்களுக்கான நாடாளுமன்ற குழு தகவல்

(கொழும்பு)

இலங்கையின் 24 அரச நிறுவனங்கள் 2010 முதல் இன்று வரையான காலப் பகுதியில் முறையற்ற நிர்வாகம் திறமையின்மை மற்றும் ஊழல் காரணமாக 10 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான தொகை நட்டமேற்பட்டிருப்பதாக பொது நிறுவனங்களுக்கான நாடாளுமன்ற குழுவான கோப் தெரிவித்துள்ளது.

மிஹின் லங்கா விமானப் போக்குவரத்து நிறுவனம் அதன் ஆரம்பத்திலிருந்தே குறிப்பிடத்தக்களவான நட்டம் அடைந்து வரும் நிறுவனமாக கோப் அடையாளம் கண்டுள்ளது 2007/2008 காலப்பகுதியில் 3.3 பில்லியனாக இருந்த இந்நிறுவனத்தின் நட்டம் அதற்கடுத்த காலப்பகுதியில் 4.6 பில்லியனாக உயர்வடைந்ததுடன் தற்போது அந்நிறுவனத்தின் மொத்த நட்டம் 5.7 பில்லியனாக உள்ளது.

இதுவரை ஏற்பட்டுள்ள பெருமளவிலான நட்டத்தை விட 2.4 பில்லியன் ரூபா பெறுமதியான கடன்பளுவும் அந் நிறுவனத்திற்கு ஏற்பட்டிருக்கிறது.

மேலும் தமது நிதி நிலைமைகள் குறித்து இந்நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கையில் காணப்படும். கணக்குகள் தணிக்கையாளர் நாயகத்தின் அவதானிப்புகளுக்கு ஒவ்வாததாயுள்ளன. என 'கோப்' தெரிவிக்கின்றது. இது சம்பந்தமாக போதிய சான்றுகளைச சமர்ப்பிக்கவும் இந்நிறுவனம் தவறியுள்ளது.

விமானப் போக்குவரத்துச் சேவைகள் தனியார் நிறுவனத்திடமிருந்து பெற்றுள்ள 500 மில்லியன் ரூபாய்களுக்கான வட்டியையும் 'மிஹின் லங்கா' நிறுவனம் செலுத்த வில்லை.

இக்கடனை திறை செலுத்த வேண்டி நேர்ந்ததன் காரணமாக அரசுக்கு மேலும் செலவேற்பட்டது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை. அரச அடமான மற்றும் முதலீட்டு வங்கி, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை டெலிக்கொம் நிறுவனம் ஆகிய நிறுவனங்களும் கடந்த ஆண்டில் பாரிய நட்டத்தை அடைந்த நிறுவனங்களாகும்.

மொத்த நட்டம் 90 வீதமாயிருப் பது அதிர்ச்சி தரக்கூடியதாக உள்ளதென கோப் தெவிக்கின்றது.

அமெரிக்க இரத்தினக்கல் வர்த்தகச் சங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தத்தை மீறியதில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை ஏழு மில்லியன் ரூபாய்களை இழக்க நேட்டது. அதிகாரசபையின் வருவாய் கடந்த காலங்களில் குறைந்து வருவதுடன் செலவினங்கள் அதிகத்து வருகின்றன.

அரச அடமான வங்கியில் பெருந் தொகைக் கடன்கள் அறவிடப்படாதுள்ளன. 2005 இல் 312 மில்லியனாக இருந்த இலாபம் 2008 இல் 21 மில்லியனாக வீழ்ச்சி கண்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு ஊழியர்களுக்கான மொழித்தேர்ச்சிக் கொடுப்பனவாக 306 மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளதாக அவதானிப்புக்களில் இருந்து தெரியவந்துள்ளது.

## தாயின் வீட்டுக்கு தீவைத்த மகன்

(கொழும்பு)

தாயின் வீட்டிற்கு தீ வைத்து கொளுத்திய மகனை பொலிஸார் கைது செய்துள்ளனர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்நபரை எதிர்வரும் ஒக்டோபர் 06ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு தலாவை நீதிமன்ற நீதிபதி எம்.ஆர்.சி கெரிதெனிய உத்தர விட்டுள்ளார்.

தாயுடன் ஏற்பட்ட சண்டையின் காரணமாக குறித்த நபர் தாயின் வீட்டிற்கு தீயிட்டுள்ளார்.

அத்தாய் வீட்டில் இல்லாத போது வீட்டில் உள்ள கதவை உடைத்து உள் நுழைந்து வீட்டிற்கு தீவைத்த அந்த நபர் தலைமறைவாகியுள்ளார்.

தீயினால் வீட்டிற்கு மூன்று இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான அழிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் சம்பம் இடம் பெற்று 03 நாட்களுக்கு பின்னரே கைது செய்யப்பட்டதாகவும் நீதிமன்றத்துக்கு பொலிஸார் தெரியப்படுத்தியுள்ளனர்.

## புகையிரதச் சேவையை சீரமைக்க சீனாவில் இருந்து 13 இயந்திரங்கள்

சீனாவில் இருந்து மேலும் 13 புகையிரத பவர் செட் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆயிரத்து 190 கோடி ரூபா செலவில் இறக்குமதி செய்யப்படும் இவை அடுத்த வருட ஆரம்பத்தில் சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டு பவர் செட் இயந்திரங்கள் உல்லாசப் பயணிகளின் போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்படவுள்ளதுடன் 7 இயந்திரங்கள் மலைநாட்டு புகையிரத சேவைகளுடன் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

## குற்றச்செயல்களைத் தடுக்க பொலிஸார் ரோந்துப்பணி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் குற்றச்செயல்களைத் தடுக்க பொலிஸாரினால் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக இரவில் இந்த கண்காணிப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டிருப்பதைக்காண முடிந்தது.

நகரில் தேவையற்ற பிரச்சினைகள் மற்றும் குற்றச்செயல்களைக்கட்டுப்படுத்தும் முகமாக இந்தக் கண்காணிப்பு நடவடிக்கையிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

அதனைவிட நகரின் புறநகர்ப் பகுதியிலும் பொலிஸாரின் வாகன ரோந்துக் கண்காணிப்பு நவடிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குடாநாட்டில் இடம்பெறும் குற்றச் செயல் மற்றும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸாரின் இரவுக்கண்காணிப்பு நடவடிக்கையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (வி)

## இலங்கையின் உற்பத்திப் பண்டங்களில் 60 வீதத்தை மேலைநாடுகள் நுகர்கின்றன

### பொருளாதார நிபுணர் அனுஷ்கா விஜயசிங்க

(கொழும்பு)

இலங்கை உற்பத்தியில் 60 வீதமானவற்றை மேலை நாடுகளே நுகர்கின்றன. இலங்கையின் உற்பத்திப் பண்டங்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுவதாக கொள்கை கற்கை நிறுவனத்தைச் சேர்ந்த பொருளாதார நிபுணரும் சிந்தனையாளருமான அனுஷ்கா விஜயசிங்க தெவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெவித்துள்ள தாவது உலகப் பொருளாதார ஈர்ப்புமையமாக இப்போது கிழக்கு நாடுகளே விளங்கி வருகின்றன. இது ஆசிய நூற்றாண்டு ஆகும்.

மேற்கத்தேய ஐரோப்பிய மற்றும் அமெக்கப் பொருளாதாரம் காலம் கடந்த தாகிவிட்டது.

எனினும் அமெரிக்கர்களுக்கு இயற்கையாக அமையப் பெற்றுள்ள சக்திகளைக் கொண்டு புதிய இளைஞர் சிரமப்படையொன்றை உருவாக்கிக் கொள்ள சாத்தியமுள்ளதாகையால் அவர்களுடைய பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு விட்டதெனத் தீர்மானிப்பதற்கு இன்னும் காலமிருக்கிறது.

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலேயே இலங்கை உற்பத்திகள் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இலங்கையின் முப்பதாண்டு கால யுத்தம் 2009 இல் முடிவுற்ற போதும் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என மேற்கத்தேய நாடுகள் வலியுறுத்திவருகின்றன.

மேற்படி காரணங்களால் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த பொருட்களுக்கு தீர்வைவிலக்கழிக்கும் ஜி.எஸ். பி.பிளஸ்,வர்த்தகச்சலுகையை வழங்க ஐரோப்பிய யூனியன் ஏற்கனவே மறுத்துள்ளது.

உதவி, முதலீடு மற்றும் அரசியல் ஆதரவைப் பெறுவதற்காக இலங்கை ஏற்கனவே சீனா , ரஷ்யா, ஈரான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை நாடியுள்ளது. இந்தியாவுடனான பொருளாதார உறவுகள் நெருக்கமடைய வேண்டும் இவ்வாறு அவர் தெவித்துள்ளார்.

## பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம்

### அரசாங்கம் திட்டமிடுவதாக லக்பிம தகவல்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக அமெரிக்காவில் உள்ளது போன்று உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் என்ற புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வர அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக லக்பிம நியூஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் 2012 மார்ச்சில் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்தப் புதிய சட்டத்தை கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நடை முறையில் இருப்பதால் தான், மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக அனைத்துலக சமூகம் கொழும்பு மீது கொடுத்து வரும் அழுத்தங்களைக் குறைப்பதற்காகவே அரசாங்கம் இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக அமெரிக்கா,பிரித்தானியா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் உள்ளது போன்று தீவிரவாதத்தை முறியடிப்பதற்கான புதிய சட்டம் ஒன்றை கொண்டு வருவதில் அரசாங்கம் அக்கறை காண்பிப்பதாக சட்டமா அதிபர் ஈவா வணசுந்தர உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## வடக்கு கிழக்கு மக்களுக்கு வாழும் உரிமை கிடைத்துள்ளது

### அமைச்சர் பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து வடக்கு, கிழக்கு மக்களுக்கு நிம்மதியாக வாழும் உரிமையைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து அரசின் உதவியுடன் 7200 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நீர் கொழும்பு நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிக்கும் வைபவம் கொச்சிக்கடை, பம்புகுழி நீர் விநியோகத் திட்ட அலுவலக வளவில் அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ இந் நாட்டின் ஜனாதிபதிப் பொறுப்பை பெற்றுக் கொண்டபோது அவரின் வேலைத் திட்டமாக மகிந்த சிந்தனையை முன்வைத்தார். அதன் மூலம் இந்நாட்டு மக்களை பலப்படுத்தி அச்சமின்றி கௌரவமான சமாதானத்துடன் நாட்டின் இறைமையை, நல்லாட்சியை ஏற்படுத்தி இந்த நாட்டை உலகின் அபிவிருத்தியடைந்த நாடாகமாற்றத் திட்டமிட்டார்.

எமது மக்கள் எங்கு வாழ்ந்தாலும் நகரத்தில் கிராமத்தில் தோட்டத்தில் வாழ்ந்தாலும் வடக்கில், தெற்கில்,கிழக்கில்,மேற்கில் வாழ்ந்தாலும் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களானாலும் எந்த குலத்தைச் சேர்ந்தவர்களானாலும் எந்தக் மொழியைப் பேசினாலும் சகலரையும் சரிசமனாக கவனிக்க வேண்டும் என மஹிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் சில கிராமங்களுக்கு நூறு வீதம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. நீர் கொழும்பு மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டம் பூர்த்தியடைந்துள்ளது. கட்டான பிரதேச மக்களின் குடிநீர்த் தேவையும் நிறைவேற்றிக் கொடுக்கப்படும். இலங்கையில் 10 புதிய குடிநீர் திட்டத்திற்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

எமது இறைமையை இல்லாமல் செய்வதற்கு முற்படுவதை நாம் நினைவில் வைத்திருக்க வேணடும். நாம் அரசியல் வேறுபாடுகளுக்காகவும் இனனும் பல தேவைகளுக்காகவும் பிரிந்திருந் தால் பிறக்கவிருக்கும் பிள்ளைகளின் சுதந்திரமும் சுயாதீனத் தன்மையும் இல்லாமல் போகும் என்றார்.

# கைதிகள் தினத்தை முன்னிட்டு கைதி ஒருவருக்கு திருமணப் பதிவு



(யாழ்ப்பாணம்)

கைதிகள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணச் சிறைச்சாலையிலுள்ள கைதி ஒருவருக்கு சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன எக்கநாயக்க பதிவுத் திருமணத்தை நேற்று மாலை 3.30 மணிக்கு நடத்தி வைத்துள்ளார்.

குறித்த நபர் 2009 ஆம் வட்டுவாகல் பகுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்துள்ளார். இவர்கள் வன்னிப் பகுதியில் திருமணம் முடித்த வேளை பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். இரு பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்ட சிறைச்சாலை அத்தியட்சகர் இவர்களுக்கு திருமணப் பதிவு செய்து வைத்து பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்ப்பதற்கான முன்னேற்பாடுகளையும் அமைத்துக் கொடுத்துள்ளார்.

பதிவுத் திருமணத்தை மேற்கொண்ட தம்பதிகள் மகாலிங்கம் ஜனகன் (வயது 35), ரேணுகா தேவி (வயது 33) ஆகியோராவர். இவர்களுக்கு பாவரசி (வயது 6), பகலவன் (வயது 3) என்ற இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

## 2000 முன்னாள் புலிகளுக்கு...

குறைவானவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும், அடுத்த வருடத்தில் இவர்கள் மீதான நீதிமன்ற விசாரணைகள் இடம்பெறும் எனவும் தெரிவித்தார். ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குகொள்வதற்காக நியுயோர்க் வந்துள்ள அமைச்சர் பீரிஸ், அசோஷியேட்டட் பிரஸ் செய்தியாளரிடமே இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

போர்க் காலத்தில் அரச படைகள் பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தியதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களையும் அவர் மறுத்தார்.

இருந்த போதிலும் ஜனாதிபதியால் கடந்த வருடத்தில் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு, மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்திக்கொண்டிருப்பதாகவும், யாராவது குற்றச்செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் ஆதாரங்கள் கிடைத்திருப்பின் அவர்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் விசாரணைக்காக நிறுத்தப்படுவார்கள் எனவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக பிரித்தானிய தொலைக்காட்சி வெளியிட்ட ஒளிநாடாவையும் இந்த ஆணைக்குழு பார்வையிட்டதாகத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ், நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நவம்பர் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## அரசியல் உரிமைகளை....

முடியாத நிலையில் இருக்கின்றோம். எமது மக்களின் பிரச்சினைகள் குறித்து வாய்திறக்க முடியாத நிலையில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் யாழ்ப்பாணத்தில் தற்போது உள்ளது.

இன்று தமிழர்கள் மிக மோசமான நிலையில் இருக்கின்றார்கள். காணிப் பதிவுகளை யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தி மக்களின் காணிகளை பறிமுதல் செய்வதற்கு அரசு முயற்சிக்கிறது. தமிழ் இளைஞர்களுக்கு வேலை இல்லாப் பிரச்சினை. வாழ வீடுகள் இல்லாமல் எத்தனை மக்கள் மர நிழல்களில் வாழ்கின்றார்கள்? எமது தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு தமிழ்க் கட்சிகள் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒன்றினைய வேண்டும் என்றார்.

இம் மாநாட்டில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோநோதராதலிங்கம் மற்றும் ரெலோவின் அரசியல் பிரிவுத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா அணி சிறிதரன், ரெலோ உதயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், கொள்கை உரைகளும் ஆற்றப்பட்டதுடன் கட்சியின் தீர்மானங்கள் அடங்கிய ஆவணங்களும் வெளியிடப்பட்டன.

## போர்க்குற்றம், மனித உரிமை...

மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கு நம்பகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற கடந்த கால மோதல்களுக்குக் காரணமான இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியல்தீர்வு ஒன்று காணப்பட வேண்டியதின் அவசியத்தையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் சுட்டிக்காட்டியிருப்பதாகவும் ஐ.நா. செய்திச் சேவை தகவல் வெளியிட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 6.20 மணியளவில் தொடங்கிய இந்தச் சந்திப்பிற்கு 20 நிமிடமே ஒதுக்கப்பபட்டிருந்தது. ஆனால் மேலதிகமாக 10 நிமிடங்கள் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் நியுயோர்க் செயலகத்தின் பிரதிநிதி ஜவன் சிமோனோவிக், மோதல்கள் மற்றும் பாலியல் வன்முறைகள் தொடர்பான சிறப்பு ஆலோசகர் மாகொற் வோல்ஸ்ரோம் மற்றும் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பிரதம அதிகாரி விஜய் நம்பியாரும் கலந்து கொண்டுள்ளனர். இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், பாலித கொஹன்ன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் அமெரிக்காவுக்கான தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் மனிதஉரிமைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளதால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது போர்க்குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் குறித்து பான் கீ மூன் விரிவாகக் கலந்துரையாடியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் பணியாற்றும் சிற்றூழியரான பெண் ஒருவரின் சைக்கிள் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 6.30 மணிக்கு குறித்த பெண் ஊழியர் கடமைக்கு வந்தபோது வைத்திய சாலை வளாகத்தினுள் சைக்கிளை நிறுத்தி விட்டு கடமைக்குச் சென்றுள்ளார்.

கடமைமுடிந்து மாலை 5.00 மணிக்கு வந்துபார்த்தபோது சைக்கிள் திருடிச் செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பாக வைத்தியசாலை அதிகாரிகளிடம் முறையிடப்பட்டுள்ளது. (எஸ்)

## அமெரிக்க...

எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே, தன் மீதோ தனது கட்டளையின் கீழ் இருந்தவர்கள் மீதோ சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக உலகின் எந்த நீதிமன்றத்திலும் வழக்கை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா கூறியுள்ளார். எவரும் தன் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்த முடியும் என்றும் அவற்றை எதிர்கொள்ளத் தயாராகவே இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள பாதுகாபபுச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, புலிகளின் கொடூரச் செயல்கள் குறித்து அமெரிக்க நீதிமன்றத்தில் விபரிக்க இது நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

கேணல் ரமேஸ் ஒரு மோசமான பயங்கரவாதி என்றும், அவர் சரணடைந்த நூற்றுக்கணக்கான பொலிஸாரையும், அரந்தலாவவில் பௌத்த பிக்குகளையும், முஸ்லிம் கிராமவாசிகளையும் படுகொலை செய்தவர் என்றும் குற்றம்சாட்டியுள்ள கோத்தாபய ராஜபக்ஷ, அவரது மனைவியும் இந்தக் கொடூரச் செயல்களில் தொடர்புபட்டிருந்தவர் என்றும் கூறியுள்ளார்.

# நிமிடத்திற்கு இரு மோட்டார் சைக்கிள்கள் புதிதாக வீதிக்கு வருகின்றன



(கொழும்பு)

நாட்டில் ஒவ்வொரு நிமிடமும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் புதிதாக வீதிக்கு வருவதாக மோட்டார் வாகனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த வருடம் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 148 மோட்டார் சைக்கிள்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி மாதத்திற்கு கிட்டத்தட்ட 20525 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதனடிப்டையில் ஒரு தினத்திற்கு 933 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தினத்திற்கு வேலை செய்யும் நேரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் ஒரு மணித்தியாலத்திற்கு 117 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்படுகின்றன எனவும் அது கிட்டத்தட்ட நிமிடத்திற்கு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்ற எண்ணிக்கையில் இருப்பதாகவும் மோட்டார் வாகனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## குடாநாட்டில் அசாதாரண...

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றையதினம் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி.யின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), யாழ். மாநகர பிரதி முதல்வர் இளங்கோ (றீகன்), வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் கருணாகரகுருமூர்த்தி, ஆகிய உயர்மட்டப் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

இக்கலந்துரையாடலில் குடாநாட்டில் பரவலாக இனந்தெரியாத நபர்களினால் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெண்கள் மற்றும் பாடசாலைகள் மாணவிகள் மீதான வன்முறைகள், சமூக விரோத செயற்பாடுகளான கசிப்பு உற்பத்தி போதைப்பொருள் விற்பனை கொலை மற்றும் கொலை முயற்சி, திருட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல் சமூக மற்றும் கலாச்சார சீர்கேடுகளை கட்டுப்படுத்துதல், சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோரை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்துதல், யாழ்.குடாநாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையை முடிவிற்கு கொண்டு வந்து நிலையானதும் அமைதியானதுமான ஓர் சூழ்நிலையை ஏற்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஈ.பி.டி.பி. பிரதிநிதிகளினால் முன்வைக்கப்பட்டது.

இதேவேளை நாவாந்துறை, பாசையூர், கொக்குவில் ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை போன்று தொடர்ந்தும் சம்பவங்கள் ஏற்படாதிருப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளினை மேற்கொள்வதன் அவசியம் தொடர்பாகவும் ஈ.பி.டி.பி. பிரதிநிதிகளினால் வலியுறுத்தப்பட்டது.

இதன்போது மாவட்டம் தழுவிய ரீதியாக ஏழு பொலிஸ் கண்காணிப்பு அணிகளை நடவடிக்கையில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் இதன் மூலம் பிரதேசங்களில் சமூக விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியும் எனவும் பிரதேச மட்ட பிரதிநிதிகளை தெரிவு செய்து ஒன்றிணைப்பதன் ஊடாக குற்றச்செயல்களை வெகுவாக கட்டுப்படுத்த முடியும் என யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். இவ்வாறான கலந்துரையாடலை மாதந்தோறும் நடாத்தி பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவது என இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

## வெளிநாட்டுத் தலையீட்டைத்...


கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் இடையே நியுயோர்க்கில் இடம்பெற்ற சந்திப்பின்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை தனது பிரச்சினைகளை தானே தீர்த்துக் கொண்டிருந்தால், வெளிநாடுகள் ஏன் தலையிடுகின்றன என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் மன்மோகன் சிங் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்க்க வெளிநாடுகளின் தலையீடு அவசியமில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ரையில் கூறியிருந்தமைக்கு பதிலளிக்கும் முகமாகவே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இவ்வாறு தெரிவித்ததாக கூறப்படுகிறது.

### செய்திப்பாணம்

**குடிநீரைச் சேமிக்கும் குணமார்ந்த ஒட்டகமாய்**
**அடிவயிறுக் கிதமாக அமையவிலை - முடிசாயும்**
**மனிதருக்கு அவ்விதம் மறந்தும் படைத்தாலோ**
**புனிதமாம் இறைகெடும் புவி!**



# தேசிய குடித்தொகை மதிப்பீடு ஒக்டோபர் மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

தேசிய குடித்தொகை மதிப்பீடுகள் எதிர்வரும் ஒக்டோபர் ஆரம்பமாகும் என்று புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் சுரன் ஜீனா வித்தியாரத்ன தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக மேலும் அவர் குறிப்பிடுகையில் 1981 ஆம் ஆண்டின் பின்னர் நாடு முழுவதுமாக குடிசன மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த மதிப்பீட்டின் போது வீடுகள், தொழிற்சாலைகள், மக்கள் தொகை, மதவழிபாட்டுதலங்கள் தனியார் அலுவலகங்கள், மக்கள் பொதுவசதிகள், குடும்ப வருமானம், வாழ்வாதாரம, தொழில்வாய்ப்பு போன்றவை தொடர்பாக தகவல்கள் திரட்டப்படவுள்ளன.

கிட்டத்தட்ட 25 விடயங்கள் தொடர்பான மதிப்பீடுகள் மதிப்பீட்டு பணியாளர்களினால் மதிப்பிடப்பட்டு தரவுகள் எடுகப்படும்.

மதிப்பீடு தொடர்பான இறுதி அறிக்கை 2012 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் வெளியிடப்படும். இதற்காக 500 உத்தியோகஸ்தர்களும் 75 ஆயிரம் கணக்கெடுப்பு பணியாளர்களும் பயிற்றுவிக்கப் படவுள்ளனர். மூன்று தசாப்தத்தின பின்னர் நாடு தழுவிய ரீதியில் குடித்தொகை மதிப்பீடுகள் இடம் பெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் இக்குடிசன மதிப்பீட்டின் பெறுபேறுகளின் பிரகாரமே எதிர்வரும் தேர்தலில் மாவட்டங்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீடு செய்யப்படும். இன்று யாழ் சனத்தொகையைப் பொறுத்தவரை அது கணிப்பீட்டின் பின்னர் சரி அரைவாசியாக குறையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறாயின் யாழ் மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் சரி அரைவாசியாக குறையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## அதிரடிப்படை வீரர்களின் வாக்குவாதம் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது

(அம்பாறை)

அம்பாறையில் மகா ஓயாவில் சிறப்பு அதிரடிப் படையின் உயர் அதிகாரிக்கும் உதவி ஆய்வாளருக்கும் இடையே நேற்று இடம்பெற்ற வாக்குவாதம், துப்பாக்கிச் சூட்டில் முடிந்ததில் இருவரும் உயிரிழந்தனர்.

மகா ஓயாப்பிரதேசத்தின் சிறப்பு அதிரடிப்படை கட்டளை அதிகாரியான உதவிக் பொலிஸ் அத்தியட்கசர் சிசிரகுமார, மற்றும உதவி ஆய்வாளருமே உயிரிழந்தவர்களாவர்.

மகா ஓயா 65 ஆம் சந்தியிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமில் அதிகாரிக்கும், உதவி ஆய்வாளருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து உதவி ஆய்வாளர் தனது மேலதிகாரி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், தன்னைத் தானே சுட்டுக்கொண்டார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டபோதிலும் சிசிரகு மார சற்றுநேரத்தில் உயிரிழந்தார். இந்த நிலையில் உதவி ஆய்வாளரும் நேற்றுமாலை சிகிச்சை பலனளிக்காது உயிரிழநதார். இச்சம்பவம் தொடர்பாக விசார ணைகள் நடைபெறுவதாக விசேட அதிரடிப்படைத் தளபதியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆர்.டபிள்யூ.எம்.சி.ரணவண தெரிவித்தார்.

## இருவேறு வீதி விபத்தில் ஐவர் காயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு பகுதியில் நேற்று மாலை இருவேறு வீதி விபத்தில் ஐவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மண்டைதீவுப் பகுதியில் நேற்று மாலை 6.45 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில இருவர் காயமடைந்துள்ளனர். இ.போ.சபைக்குச் சொந்தமான பஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.


இதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த மண்டைதீவு பகுதியைச் சேர்ந்த கே.கவாஸ்கர் (வயது -22), கே.கிருஸ்ணரூபன் (வயது -22) என்ற இருவருமே காயமடைந்தவர்களாவர்.

சங்கானைப் பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் மூவர் காயமடைந்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் அடங்குவர்.

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஒரே குடும்த்தைச் சேர்ந்த ஆர்.அலெக்ஸ்சாண்டர் (வயது - 36), அக்சிலா (3மாதம்) காயமடைந்தனர். மேலும் மற்றைய மோட்டார் சைககிளில் பயணம் செய்த ஆர்.தவனேசர் (வயது-29) என்பவரும் காயமடைந்துள்ளனர். (எப்.எஸ்)

## உயர் கல்வி அமைச்சருக்கு எதிராக பல்கலை மாணவர்கள் சுவரொட்டி

(கொழும்பு)




உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவின் செயற்பாடுகள் காரணமாக இலவசக் கல்வியானது பாதாளத்திற்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக மாணவர்கள் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர்.

மாணவர்கள் தமது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் சுவரொட்டிகளை ஒட்ட ஆரம்பித்துள்ளனர். பொறியியல் பீட மாணவர் சங்கத்தினால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. தனியார் பல்கலைக் கழகங்களுக்கு இலங்கையில் அனுமதி வழங்க எடுத்துள்ள முயற்சி, பல்கலைக் கழகங்களுக்கு புதிதாகத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு படை முகாம்களில் வழங்கப்படும் பயிற்சி நெறி உட்பட பல்வேறு விடயங்கள் காரணமாக உயர்கல்வி அமைச்சருக்கும் மாணவர்களுக்குமிடையில் முரண்பாடுகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொள்ளையரின் துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் காயம்



குருநாகல் நகரில் பிரதான வீதியில் பிரதான பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலின் முன்னால் அமைந்துள்ள வெளிநாட்டு நாணயங்கள் மாற்றும் கடையினை கொள்ளையிட வந்தவர்களின் கைத்துப் பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி குருநாகல் பொலிஸ் நிலையக் கான்ஸ்டபில் ஒருவர் படுகாயத்திற்குள்ளாகி குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குருநாகல் பொலிஸார் தெரிவிக்கின்றனர்

நேற்று காலை 9. 15 மணி அளவில் பல்சர் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் வியாபாரத் தளத்தினுள் நுழைந்து அதற்குள் உள்ள இரும்புக் கம்பிக் கதவை தள்ளிக்கொண்டு நுழைய முயற்சி செய்தபோது விபாயார நிலையத்தின் உரிமையாளருக்கும் திருடர்களுக்குமிடையே சண்டை இடம்பெற்றபோது கை துப்பாக்கி வெடிச சத்தைக் கேட்டு அவ்விடம் சென்ற பொலிஸாரை சுட்டு விட்டு திரும்பி தப்பிச் சென்றுவிட்டனர்.

அத்துடன் திருடர்ககளின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி வியாபார நிலையத்தின் உரிமையாளர் சிறு காயத்திற்கு இலக்காகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது குறித்து குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகதாகவும் மேலும் தெரிவிக்கின்றனர்.



"பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகளைத்தடுத்தலும் அவற்றுக்கு எதிர்வினையாற்றலும் சட்டங்கள் மற்றும் பயனுள்ள அமுலாக்கலும்" எனும் கருப்பொருளில் ஆசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பிராந்திய மாநாடு கடந்த 15 ஆம் 16 ஆம் 17 ஆம் திகதி இந்திய தலைநகர் புதுடெல்லி நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு இலங்கை குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்ற நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் டில்லி நாடாளுமன்ற சபாநாயகர் மீரர்குமாரை சந்தித்தபோது...

## வெலிக்கடையில் தமிழ் கைதி சிறுநீரக நோயினால் பாதிப்பு உதவிபுரியுமாறு மனைவி வேண்டுகோள்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதி ஒருவர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். 33 வயதான இராசரத்தினம் ஜெகதீஸ்வரன் என்ற இந்த தமிழ் அரசியல் கைதியின் விடுதலைக்கும், அவருக்கான வைத்தியத்திற்கும் உதவி புரியுமாறு அவரது குடும்பத்தினர் கோரியிருக்கின்றனர்.

மன்னார் திருக்கேதீஸ்வரத்தைச் சேர்ந்த இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவரது மனைவி தெரிவித்தார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது முள்ளியவளையில் இருந்து இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலுக்குச் சென்றிருந்தபோது, துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கு இலக்காகியிருந்த இவர் கப்பல் மூலமாக புல்மோட்டைக்குச் சென்று திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார்.

இந்த நிலையில் இவர், 2009 ஆம் ஆண்டு பிற்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு பூசா முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து வெலிக்கடைச் சிறைக்கு மாற்றப்ட்டிருந்தார். தனது கணவனுக்கு எதிராக இன்னும் குற்றச்சாடடுக்கள் சுமத்தப்படவோ வழக்குத் தாக்கல் செய்யப்படவோ இல்லை என்று அவரது மனைவி தெரிவித்தார்.

## கைதியைத் தாக்கிய சம்பவம் 7 பொலிஸார் இடைநிறுத்தம்

யாழ். நீதவான் நீதிமன்றத்திற்குள் நுழைந்து விடுவிக்கப்பட்ட கைதி ஒருவரை பொலிஸார் தாகிய சம்பவம் தொடர்பாக 7 பொலிஸார் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

கைதியைப் பொலிஸார் தாக்கிய சம்பவத்தைக் கண்டித்தும், நீதிமன்றத்தின் சிறப்புத்தன்மையை மீறிய பொலிஸாரின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடந்த செவ்வாய்க கிழமை முதல யாழ். சட்டத்தரணிகள் நீதிமன்ற அமர்வுகளைப் புறக்கணித்துப் பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் யாழ். சட்டத்தரணிகளின் சுதந்திரத்தையும் கௌரவத்தையும் பாதிப்பதாக இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதால் சட்டத்தரணிகள் சம்பந்தப்பட்ட பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கப்படும் வரை தாம் பணி பகிஷ்கரிப்பைத் தொடர்வதாகத் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையிலேயே சம்பவத்துடன் தொடர்புடைய 2 சார்ஜன்ட், 5 கான்ஸ்டபிள் என ஏழு பொலிஸார் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கொஹன்ன கூறிய இரகசியம் இன்னர்சிற்றி பிறசிடம் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

சனல் - 4 தொலைக்காட்சி தயாரித்த இலங்கையின் கொலைக் களங்கள் ஆவணப்படத்தை இன்னமும் பார்வையிடாத ஐ.நா பொதுசசெயலர் பான் கீ மூன், அதற்குப் பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசு தயாரித்த" Lies Agreed To" ஆவணப் படத்தைப் பார்வையிட்டிருப்பதாக இன்னர் சிற்றி பிறஸ் சந்தேகம் எழுப்பியுள்ளது.

ஐ.நா தலைமையகத்தில் நேற்று முந்தினம் இரவு ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனைச் சந்தித்து விட்டு ஜனாதிபதி தலைமையிலான குழு வெளியே வந்தது. பான் கீ மூனைப் பற்றி சாதாரணமாகப் பேசியவாறே இலங்கை சூழுவினர் சந்திப்பு அறையில் இருந்து வெளியே வந்தனர். அப்போது, "நாங்கள் அவருக்கு அனுப்பிய காணொளியை அவர ஏற்கனவே பார்வையிட்டுள்ளார்" என்று ஜனாதிபதியைப் பார்த்து, பாலித கொஹன்ன கூறி யுள்ளார். இதனை இன்னர்சிற்றி பிரஸ் செய்தி யாளர் மத்யூ ரசல் லீ காணொளியில் பதிவு செயதுள்ளார். பாலித கொஹன்ன கூறியது "இலங்கையின் கொலைக்களங்கள்" ஆவணப்படத்துக்குப் போட்டியாக அரசாங்கம் தயாரித்த" Lies Agreed To" ஆவணப் படமே என்று இன்னர சிற்றி பிறஸ் கூறியுள்ளது.

இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப் படத்தின் ஒரு இறுவட்டு ஐ.நா. பொதுச்செயலருக்கு அனுப்பப்பட்டு நீண்டநாட்களாகியும் அவர் அதனைப் பார்வையிடவில்லை.

ஐ.நா பொதுச்செயலர் இந்த ஆவணப்படத்தை இன்னமும் பார்வையிடவில்லை என்றும், ஆனால் அதன் உள்ளடக்கம் பற்றி அவர் அறிந்து கொண்டுள்ளதாகவும் பான் கீ மூனின் பேச்சாளர் மார்ட்டின் நெஸ்ர்க்கி கடந்த 22 ஆம் திகதி கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.